# செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686424-4-7

**(108)**



## மயிலை சீனிவேங்கடசாமி

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/78.%20%E0%AE%AE%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%88%20%E0%AE%9A%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BF.%E0%AE%B5%E0%AF%87%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%9F%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF_1900

# செந்தமிழ்சிற்பிகள்

## *மயிலை சீனி.வேங்கடசாமி (1900-1980)*



### அறிமுகம்

தமிழறிஞரும், எழுத்தாளருமாவார். தமிழக வரலாறு பற்றி பல அரிய ஆய்வு நூல்களை எழுதியவர்.

சென்னை மயிலாப்பூரில் (1900) பிறந்தவர். தந்தை சித்த மருத்துவர். பழந்தமிழ் ஓலைச் சுவடிகள், நூல்களைத் தேடித் தேடி சேகரித்து வாசிக்கும் பழக்கம் கொண்டவர். வேங்கடசாமிக்கும் இயல்பிலேயே தமிழில் அதிக ஆர்வம் இருந்தது.

தமிழறிஞர் கோவிந்தராஜன், மகாவித்வான் சண்முகம் பிள்ளை, பண்டிதர் சற்குணர் ஆகியோரிடம் தமிழ் பயின்றார். மயிலை புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளி, சென்னை கலைக் கல்லூரியில் படித்தார். ஓவியக் கலையில் இருந்த ஆர்வத்தால், கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டு, எழும்பூர் ஓவியப் பள்ளியில் சேர்ந்தார்.

சாந்தோம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 'திராவிடன்' இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்றினார்.குடியரசு, ஊழியன், செந்தமிழ், ஆனந்தபோதினி, ஈழகேசரி உள்ளிட்ட இதழ்களில் 200-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார்.

தமிழ்நாட்டு வரலாறு' என்ற நூலில் இலங்கையில் தமிழர் என்ற இவரது ஆய்வுக் கட்டுரையும் இடம்பெற்றது. தமிழக வரலாற்றைக் கட்டமைத்து, ஒழுங்குபடுத்தியதில் முக்கியப் பங்காற்றியவர். பழங்கால ஓவியங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். தமிழ், தமிழர் வரலாறு, கலாச்சாரம், வாழ்க்கைமுறை, இலக்கியம், இயல், இசை, நாடகம் என இவர் ஆய்வு மேற்கொள்ளாத துறைகளே இல்லை.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். 'தலைமுறைக்குத் தமிழ் முதலாக்கிக்கொண்ட பல்கலைத் தலைவன் எல்லாம் தமிழ்ச் சீனி வேங்கடத்தின் கால்தூசும் பெறாதார் என்பேன்' என்று பாவேந்தர் பாரதிதாசன் இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

படைப்பாளி, வரலாற்று அறிஞர், சொல்லாய்வு நிபுணர், கல்வெட்டு, சாசனம், தொல்லியல் களங்களில் முத்திரை பதித்தவர், பன்மொழிப் புலவர், சமூகவியல் அறிஞர் என பல்வேறு பரிமாணங்கள் கொண்ட மயிலை சீனி.வேங்கடசாமி 80-வது வயதில் (1980) மறைந்தார்.

### படைப்புகள்

1936 - கிறித்தவமும் தமிழும்

1940 - பௌத்தமும் தமிழும்

1943 - இசைத் திருமணம் (சீவக சிந்தாமணியில் காணப்படும் இசைக் கூறுகள் பற்றிய சிறு நூல்)

1944 - இறையனார் அகப்பொருள் ஆராய்ச்சி - சிறுநூல்

1950 - மத்த விலாசம் - மொழிபெயர்ப்பு - சிறுநூல்

- மகாபலிபுரத்து ஜைன சிற்பம்

1952 - பௌத்தக்கதைகள்

1954 - சமணமும் தமிழும் (முதற்பகுதி)

1955 - மகேந்திரவர்மன் - மயிலை நேமிநாதர் பதிகம் - மயிலாப்பூர் வரலாறு

1956 - கௌதம புத்தர்

- தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

1957 - வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்

1958 - அஞ்சிறைத் தும்பி (சொல் ஆராய்ச்சிக் கட்டுரைகள்)

- மூன்றாம் நந்திவர்மன்

1959 - மறைந்துபோன தமிழ் நூல்கள்

- சாசனச் செய்யுள் மஞ்சரி

1960 - புத்தர் ஜாதகக் கதைகள்

1961 -மனோன்மணியம் - பதிப்பு

1962 - பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்

1965 - உணவுநூல்

1966 - துளு நாட்டு வரலாறு (கி.பி. 2ஆம் நூற்றாண்டு)

- சமயங்கள் வளர்த்த தமிழ் (கட்டுரைத் தொகுதி)

1967 - இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்

- நுண்கலைகள்

1970 - சங்க கால தமிழக வரலாற்றில் சில செய்திகள்

1974 - பழங்காலத் தமிழ் வாணிகம் (சங்க காலம்)

- கொங்கு நாட்டு வரலாறு (பழங்காலம் கி.பி.250 வரையில்)

1976 - களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

1977 - இசைவாணர் கதைகள்

1981 - சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுழுத்துக்கள்

1983 - தமிழ்நாட்டு வரலாறு (சங்க காலம் - அரசியல்) (இயல்கள் 4,5,6,10 மட்டும்)

(😊)(😊)(😊)@@@@@(😊)(😊)(😊)

## ஆய்வுகள்

மயிலை சீனி. வேங்கடசாமி வரலாற்றாய்வு, இலக்கிய வரலாற்று ஆய்வு என்னும் இரு தளங்களில் செயல்பட்டவர். தமிழ், வடமொழி. ஆங்கிலம், திராவிட மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர். ஊர்தோறும் சென்று கல்வெட்டு ஆய்வினை மேற்கொண்டார். சுயமாகப் பயின்று கல்வெட்டுகளைப் படிக்கும் திறன் பெற்றார். கோலெழுத்து, கிரந்த எழுத்து, பல்லவர் எழுத்து, பிராமி எழுத்து எனப் பல்வகையான எழுத்து முறைகளை அறிந்தார்.பழைய ஏட்டுச்

சுவடிகளை முறையாகப் படிக்கக் கற்றார். தொன்மையான சாசனங்களைச் சேகரித்தார்.

மயிலை சீனி.வெங்கடசாமி 'செந்தமிழ்ச்செல்வி', 'ஆராய்ச்சி', ஈழகேசரி', 'ஆனந்தபோதினி', 'சௌபாக்கியம்', 'செந்தமிழ்', 'திருக்கோயில்', 'நண்பன்', 'கல்வி', 'தமிழ் நாடு,', 'தமிழ்ப் பொழில்' போன்ற இதழ்களில் கட்டுரைகள் எழுதினார்.

## வரலாற்றாய்வு

மயிலை சீனி.வேங்கடசாமி தமிழக வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருந்த தொடக்க காலத்தில் செயல்பட்ட அறிஞர். தொல்லியல் சான்றுகளையும் இலக்கியச் சான்றுகளையும் இணைத்து வாசித்து தமிழ் வரலாற்றின் விடுபட்ட பகுதிகளை எழுதினார்.

மயிலை சீனி வேங்கடசாமியின் ஆய்வுக் காலம் மூன்றாகப் பிரிக்கத் தக்கது என்று வீ.அரசு மயிலை சீனி வேங்கடசாமி ( இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை) நூலில் கூறுகிறார். வசதிக்காக நான்கு காலகட்டங்களாக பிரிக்கலாம். முதற்காலகட்டத்தில் முதன்மையாக இலக்கிய ஆய்வுகளையே செய்துள்ளார். அவை பெரும்பாலும் இலக்கியத்தில் கிறிஸ்தவ, பௌத்த, சமண மதங்கள் ஆற்றிய பங்களிப்பு சார்ந்த ஆய்வுகள்.

இரண்டாம் காலகட்டத்தில் பல்லவர் கால வரலாற்றை கல்வெட்டுகள், நூல்செய்திகளின் அடிப்படையில் ஆய்வுசெய்துள்ளார். இவை முறையான வரலாற்றாய்வுகள். கல்வெட்டுச் செய்திகளின் அடிப்படையில் மகேந்திரவர்மன் (1955), வாதாபி கொண்ட நரசிம்ம வர்மன் (1957), மூன்றாம் நந்திவர்மன் (1958) ஆகிய வரலாற்றாய்வு நூல்களை எழுதினார். மூன்றாம் காலகட்டத்தில் மீண்டும் இலக்கியவரலாற்று ஆய்வுகளைச் செய்தார்.

நான்காம் காலகட்டத்தில் மீண்டும் வரலாற்றாய்வுகளுக்கு மயிலை சீனி வேங்கடசாமி திரும்பினார். 1966-ல் சென்னை பல்கலை கழகம் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவை மயிலை சீனி.வேங்கடசாமி நடத்தினார். அதை சென்னை பல்கலைக்கழக

ஆய்விதழ் வெளியிட்டது. அதன் தொடர்ச்சியாக சங்ககாலத்தில் இருந்த வெவ்வேறு நாடுகளை பற்றி ஆய்வுசெய்து துளிநாட்டு வரலாறு (1966), கொங்குநாட்டு வரலாறு (1974) ஆகிய நூல்களையும், 'தமிழநாட்டு வரலாறு-சங்ககால- அரசியல்' (1983), களப்பிரர் ஆட்சியில் தமிழகம் (1980) ஆகிய நூல்களையும் எழுதினார்.

## இலக்கிய வரலாற்றாய்வு

மயிலை சீனி வேங்கடசாமி தொடக்க காலம் முதலே இலக்கியவரலாறு சார்ந்து ஆய்விதழ்களில் எழுதிவந்தார். இவருடைய ஆய்வுவாழ்க்கையின் முதற்காலகட்டத்தில் இலக்கியத்தில் மதங்களைப் பற்றிய ஆய்வுகளைச் செய்தார். மயிலை சீனி வேங்கடசாமி எழுதிய முதல் நூல் கிறிஸ்தவமும் தமிழும். 1936-ல் வெளியான இந்நூல் 1934-ல் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலை பள்ளியில் தெம்.பொ.மீனாட்சிசுந்தரம் பிள்ளை நடத்திய கருத்தரங்கில் ச.த.சற்குணர் ஆற்றிய உரையில் இருந்து தூண்டுகோல் கொண்டு எழுதப்பட்டது.

மயிலை சீனி வேங்கடசாமியின் முதன்மையான கொடையாக கருதப்படுவது அவர் தமிழக வரலாற்றில் சமணம், பௌத்தம் ஆகியவை வகித்த பங்கை தொல்தமிழ் நூல்சான்றுகளைக் கொண்டு நிறுவியமைதான். அவர் 1940-ல் எழுதிய 'பௌத்தமும் தமிழும்' ஒரு முன்னோடி நூலாகக் கருதப்படுகிறது. தொடர்ந்து தம்மபத அர்த்த கதை என்னும் நூலில் இருந்து (புத்தகோஷர் எழுதிய தம்மபதார்த்த கதா) சில கதைகளையும் வேறு சில கதைகளையும் மொழியாக்கம் செய்து பௌத்த கதைகள் என்னும் நூலை 1952-ல் வெளியிட்டார். 1956-ல் கௌதமபுத்தர் என்னும் புத்தர் வரலாற்று நூலை எழுதினார். 1960-ல் புத்தர் ஜாதகக் கதைகள் என்னும் நூலை எழுதினார்.

மயிலை சீனி வேங்கடசாமி 1954-ல் சமணமும் தமிழும் என்னும் நூலை எழுதினார். தொடர்ந்து காந்தருவதத்தையின் இசைத்திருமணம் (1943) என்னும் நூலில் சமணமும் தமிழும் என்னும் நூலை எழுதிக்கொண்டிருக்கும் செய்தியை பதிவுசெய்திருந்தார். மகாபலிபுரத்து ஜைனசிற்பம் (1950) போன்ற நூல்களை எழுதினார்.

மயிலை சீனி வேங்கடசாமி தன் ஆய்வு வாழ்க்கையின் இரண்டாம் காலகட்டத்தில் மீண்டும் இலக்கிய வரலாற்றாராய்ச்சிகளில் ஈடுபட்டார். 1962 பிப்ரவரி மாதம் அண்ணாமலை பல்கலைகழகத்தில் தமிழ்த்துறையில் மூன்று அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இவை 'சங்ககால தமிழக வரலாற்றில் சில செய்திகள்' (1970) என்ற பெயரில் நூலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டன. அதன்பின் சங்ககால மன்னர்கள், களப்பிரர்கள் குறித்தும் பண்டைய எழுத்துருவங்கள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொண்டார். பழங்கால தமிழர் வணிகம் (1976) சங்ககாலத்து பிராமி கல்வெட்டெழுத்துக்கள் (1981) ஆகிய நூல்கள் இக்காலத்தில் வெளிவந்தவை.

## நூல்கள்

மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் கட்டுரைகள் (ஆறு தொகுதிகள், 2001) ப. சரவணன் தொகுக்க நூலாக வெளிவந்துள்ளன.

### சமய ஆய்வு நூல்கள்

- பௌத்தமும் தமிழும் 1940
- கிறித்துவமும் தமிழும் 1936
- சமணமும் தமிழும் 1954
- சமயங்கள் வளர்த்த தமிழ் 1966
- புத்தர் ஜாதகக் கதைகள் 1960
- பௌத்தக் கதைகள் 1952
- கௌதம புத்தர் 1956

### இலக்கிய ஆய்வு நூல்கள்

- தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள்
- இறையனார் களவியல் ஆராய்ச்சி
- 19-ம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்
- மறைந்து போன தமிழ் நூல்கள்
- மனோன்மணீயம் - பதிப்பும் குறிப்புரையும்

- அஞ்சிறை தும்பி 1958
- இறையனார் அகப்பொருள் ஆராய்ச்சி - சிறுநூல் 1944
- மறைந்து போன தமிழ் நூல்கள் 1959
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் 1962

**வரலாற்றாய்வு நூல்கள்**

- சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் 1970
- தமிழ்நாட்டு வரலாறு (சங்க காலம் - அரசியல்) 1983
- பழங்காலத் தமிழர் வாணிகம்- சங்ககாலம் 1974
- கொங்குநாட்டு வரலாறு (பழங்காலம்) 1974
- களப்பிரர் ஆட்சியில் தமிழகம் 1976
- சேரன் செங்குட்டுவன்1966
- மகேந்திரவர்மன் 1955
- வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் 1957
- மூன்றாம் நந்திவர்மன் 1958
- துளுநாட்டு வரலாறு 1966
- பாண்டிய வரலாற்றில் ஒரு புதிய செய்தி1983

**கலை ஆய்வு நூல்கள்**

- தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் 1956
- நுண்கலைகள்
- இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம் 1948
- மாமல்லபுரத்துச் சைன சிற்பங்கள்
- இசைவாணர் கதைகள் 1977

**கல்வெட்டு, சாசன ஆய்வு நூல்கள்**

- சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுகள் 1981
- சாசனச் செய்யுள் மஞ்சரி 1959

**பொது நூல்கள்**

- உணவு நூல் 1965

- இசைத் திருமணம் (சீவக சிந்தாமணியில் காணப்படும் இசைக் கூறுகள் பற்றிய சிறு நூல்) 1943
- மத்த விலாசம் - மொழிபெயர்ப்பு - சிறுநூல் 1950
- மயிலை நேமிநாதர் பதிகம்
- மயிலாப்பூர் வரலாறு

**அச்சில் வெளிவராத நூல்கள்**

- இந்து மதமும் தமிழும்
- இஸ்லாமும் தமிழும்
- சமணமும் தமிழும் ( பாகம் 4)
- 18-ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்
- யானைக் கோயில் வரலாறு
- தமிழ்நாட்டுச் சிற்பக் கலை

# வாழ்க்கைக் குறிப்பு

வேங்கடசாமி சென்னையின் மயிலாப்பூர் பகுதியில் 1900-இல் பிறந்தார். அவரின் தந்தை ஒரு சித்த மருத்துவர். வேங்கடசாமியின் மூத்த அண்ணன் தந்தையைப் போல சித்த மருத்தவரானார். இரண்டாவது அண்ணன் சீனி. கோவிந்தராஜன் ஒரு தமிழறிஞர். *திருக்குறள் காமத்துப்பால் நாட்கள், திருமயிலை நான்மணி மாலை* ஆகிய படைப்புகளை எழுதியவர். வேங்கடசாமி கோவிந்தராஜனிடம் தமிழ் பயின்றார். பின் மகாவித்வான் சண்முகம் பிள்ளை, பண்டித சற்குணர் ஆகியோரிடம் தமிழ் படித்தார். பின்னர் நீதிக்கட்சி நடத்திய *திராவிடன்* இதழின் ஆசிரியர் குழுவில் பணிக்குச் சேர்ந்தார். ஓவியக்கலையில் கொண்ட ஆர்வத்தால் சில காலம் எழும்பூர் ஓவியப் பள்ளியில் படித்தார். குடும்பப் பொருளாதாரச் சூழல் காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்று சாந்தோம் மாநகராட்சிப் பள்ளியில் ஆசிரியராகப் பணிக்குச் சேர்ந்தார்.

தனது விடுமுறை நாட்களில் தமிழகமெங்குமுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்கும், வழிபாட்டுத் தலங்களுக்கும் சென்று ஆய்வு செய்தார். தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் ஆகிய துறைகளில் அரிய களப்பணியாற்றினார். தென்னிந்திய எழுத்து முறைகள் யாவற்றையும் கற்றுத்

தேர்ந்தார். பிராமி, கிரந்தம், தமிழ் என அனைத்து எழுத்துமுறை கல்வெட்டுகளைப் படித்து ஆராயும் திறன் பெற்றார். கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளையும் கற்றறிந்திருந்தார். இந்து சமய வரலாற்றாளர்கள் அதிகம் கவனம் செலுத்தாத சமண, புத்த சமய கோயில்களையும் தொல்லியல் களங்களையும் ஆய்வு செய்தார். இரு முறை (1963-64) சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.[2][3][4]

வேங்கடசாமியின் தமிழ்ப்பணியைப் பாரதிதாசன் பின்வருமாறு பாராட்டியுள்ளார்:

தமிழையே வணிகமாக்கித்
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்பதற்கும்
தலைமுறை தலைமுறைக்குத்
தமிழ் முதலாக்கிக் கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச் சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்"

2000-ஆம் ஆண்டு தமிழக அரசு சீனி. வேங்கடசாமியின் நூல்களை நாட்டுடைமையாக்கியது.

## மயிலை சீனி வேங்கடசாமி

https://telibrary.com/articlespdf/%E0%AE%AE%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%88-%E0%AE%9A%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BF-%E0%AE%B5%E0%AF%87%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%9F%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF/

**ஆய்வுக்கட்டுரைகள்** (324 Pages)

https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZMdkuhy.TVA_BOK_0008161/mode/2up

**மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் களஞ்சியம்**

https://www.tamilvu.org/ta/library-ln00204-html-ln00204cnt-274936

## பொருளடக்கம்

# மறக்க முடியுமா?

## மயிலை சீனி. வேங்கடசாமி

HTTPS://KEETRU.COM/INDEX.PHP/2009-11-06-11-47-46/KARUNCHATTAI-JAN1-2017/32233-2017-01-16-07-11-28

### எழில்.இளங்கோவன்

சில நாள்களுக்கு முன்னர், மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களைப் பற்றித் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தன் ஒரு நிமிட செய்தியில் நினைவு கூர்ந்தார். தமிழுலகம் மறக்கக் கூடாத அறிஞர்களுள் மயிலையாரும் ஒருவர்.



மயிலை சீனிவேங்கடசாமி 1900ஆவது ஆண்டு டிசம்பர் 16ஆம் நாள் சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.

இவரின் கல்வி 10ஆம் வகுப்பு- வரைதான். பின்னர் இடைநிலை ஆசிரியாரகவே பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர் திருமணம் செய்துகொள்ளவில்லை.

படித்தது பத்தாம் வகுப்பு என்றாலும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு இணையாக இவர் ஆய்வுப் பேரறிஞராகத் திகழ்ந்தார்.

இவர் நீதிக்கட்சிக் காலத்தில் வெளிவந்த 'திராவிடன்', பெரியாரின் 'குடிஅரசு' ஆகிய இதழ்களில் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றும், கட்டுரைகள் எழுதியும் வந்தார்.

"வேதம், புராணம், கடவுள், கோயில், விதி, வினை என்று சொல்லிக்கொண்டு நாளுக்கு நாள் முட்டாள்களாகிக் கொண்டிருக்கும் வழக்கத்தை விட்டுவிட்டு எந்த விசயத்தையும் பகுத்தறிவு- கொண்டு ஆராயும் படி கேட்டுக்கொள்கிறேன்" என்று குடிஅரசு இதழில் எழுதிய பகுத்தறிவாளர் இவர்.

கல்வெட்டு, நாணயவியல், பிராமி, கிரந்தம், தமிழ், கன்னடம், மலையாளம் என்று இவரின் ஆய்வுகளின் விளைவாக, பௌத்தமும் தமிழும் - சமணமும் தமிழும் - கிருஸ்தவமும் தமிழும் - பௌத்த கதைகள் - புத்த ஜாதகக் கதைகள் - மகாபலிபுரத்து ஜைன சிற்பங்கள் - நரசிம்மவர்மன் - மூன்றாம் நரசிம்மன் - மகேந்திரவர்மனின் 'மத்தவிலாசம்' (தமிழ் மொழிபெயர்ப்பு) - களப்பிரர் ஆட்சியில் தமிழகம் - கொங்கு நாட்டு வரலாறு - துளுவநாட்டு வரலாறு- சங்ககால வரலாற்றில் சில செய்திகள் - சங்ககால சேர, சோழ, பாண்டியர் - சேரன் செங்குட்டுவன் - கல்வெட்டெழுத்துகள் - இறையனார் களவியலுரை

ஆராய்ச்சி போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியிருக்கிறார்.

தொல்காப்பியர் காலத்தால் பிற்பட்டவர் என்று வாதிட்டார் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை.

அவரின் வாதத்தை முற்றிலும் நிராகரித்தார் மயிலையார். பிராமி எழுத்து வருவதற்கு முன்பே தமிழ் எழுத்து வழக்கில் இருந்ததைச் சான்றுகளுடன் நிறுவி காலத்தால் முற்பட்டவர் தொல்காப்பியர் என்றார்.

களப்பிரர்கள் காலத்தை இருண்ட காலம் எனப் பலர் கூறுகிறார்கள். இதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மயிலையார் -

தமிழ் பிராமி (தமிழி) எழுத்திலிருந்து தமிழ் வட்டெழுத்து வடிவம் பெற்றது களப்பிரர் காலத்தில்.

இதுவே சோழ, பல்லவர் காலத்துக்குப் பின்னர் இன்றைய நவீன வடிவத் தமிழ் எழுத்துக்கு அடிப்படை என்றார்.

திருக்குறள், கார்நாற்பது, களவழி நாற்பது, திரிகடுகம், ஏலாதி, இனியவை நாற்பது, சீவக சிந்தாமணி, முதுமொழிக்காஞ்சி, விளக்கத்தார் கூத்து, நரிவிருத்தம், எலிவிருத்தம், முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்களும்,

அபிநயம், நத்தத்தம், பல்காயம், பல்காப்பியம், காக்கைப் பாடிணியம் போன்ற இலக்கண நூல்களும் களப்பிரர் காலத்தவை என்றார்.

முன்னர் இருந்த வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பா வகைகள் தாழிசை, விருத்தம், துறை என்று விரிவுபெற்றதும் களப்பிரர் காலத்தில் என்று விளக்கினார்.

பார்பனர்களிடமிருந்து இறையிலி நிலங்கள் பிடுங்கப்பட்ட சமணர்களின் காலமே களப்பிரர்களின் ஒளிமிக்க காலம் என்று உறுதிபடக் கூறினார்.

நரசிம்மவர்மன் காலத்தில் உருவாக்கப்பட்ட மாமல்லபுரப் பாறைச் சிற்பங்களில் ஒன்றைப் பாரதக் கதையின் அர்ஜுனன் தபசு என்றும், இராமாயணத்தின் பகீரதன் தபசு என்றும் இருவேறு கதைகளைக் சொல்வார்கள்.

அந்த கதைகளைத் தவறானவை என்று தன் ஆய்வின் மூலம் மறுத்துரைக்கும் மயிலையார், உரிய சான்றுகளுடன் அச்சிற்பங்கள் இரண்டாம் சமணத் தீர்த்தங்கரர் அஜிதநாதரின் புராணத்தில் வரும் சகர சக்கரவர்த்தியின் சமண கதைச்சிற்பங்கள் என்பதை உறுதி செய்கிறார்.

இன்றைய காஞ்சிபுரம், கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் பௌத்தர்களின் காஞ்சி மாநகராக இருந்தது. சீத்தலைச்சாத்தனாரின் பௌத்த காப்பியமான ‘மணிமேகலை’யின் காப்பியத் தலைவி மணிமேகலை இறந்தது காஞ்சியில்.

அதனால் அன்று காஞ்சியில் இருந்த பௌத்த ஆலயமான தாராதேவி ஆலயத்தில் மணிமேகலையின் உருவச்சிலை வைக்கப்பட்டது.

அன்றைய பௌத்த தாராதேவி ஆலயம் இன்று காஞ்சி காமாட்சியம்மன் கோயிலாக ஆக்கப்பட்டு விட்டது. அதனுள் இருந்த மணிமேகலை சிலை இன்று அன்னபூரணி இன்று இந்து தெய்வமாக மாற்றப்பட்டு விட்டது.

அன்று மணிமேகலை, சம்பாபதி, தாராதேவி ஆகிய பௌத்த சிறு தெய்வங்கள், இன்று காளி, பிடாரி, திரௌபதி அம்மன் ஆகிய பெயர்களில் இந்து தெய்வங்களாக மாற்றிவிட்டார்கள் என்ற வரலாற்று உண்மைகளைத் தன் ஆய்வின் மூலம் பதிவு செய்கிறார் மயிலை சீனி.வேங்கடசாமி.

சோழர்கள் காலத்தில் நிலவிய தேவரடியார் என்ற கொடுமையான பெண்ணடிமைத் தனத்தை, அதனை ஊக்கப்படுத்தி வளர்த்த பார்ப்பனர்கள் சோழர்கள் குறித்து நாம் அறிவோம்.

முதலாம் குலோத்துங்கன்: இவன், செயங்கொண்டார் எழுதிய 'கலிங்கத்துப்பரணி'யின் தலைவன்.

இவனின் 29ஆம் ஆட்சியாண்டின் சாசனங்களில் சோழர் கோயில்களில் தேவரடியார் பெண்கள் விலைக்கு விற்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி பதிவாகி இருக்கிறது.

இதனைச் சுட்டிக்காட்டும் மயிலை சீனி.வேங்கடசாமி, 1926இல் இவர் எழுதிய கட்டுரைகளில் பெண் கல்வி, கைம்பெண் மறுமணம், குழந்தைத் திருமண ஒழிப்பு ஆகியவைகளைப் பற்றி விரிவாக எழுதினாலும், தேவரடியார் குறித்த அவரின் பதிவு விரிவாக இல்லை என்பது வியப்பாக இருக்கிறது.

1950 காலகட்டங்களில் இவரின் தீவிர ஆய்வுகளைத் தொடர்ந்து ஏறத்தாழ முப்பது நூல்களும் திராவிடன், குடிஅரசு, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், ஆராய்ச்சி, ஊழியன், இலட்சுமி போன்ற இதழ்களில் ஏராளமான ஆய்வுகட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

இவரின் நூல்கள் அனைத்தும் இன்று நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

1963&64 இவ்விரு ஆண்டுகளில், சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

"கோயில்களில் நடைபெறும் திருப்பாவாடை நிகழ்வை ஆய்ந்து, அது ஓர் இனிப்புப் பண்டம் என்று விளக்குகிறார் மயிலை சீனி.வேங்கடசாமி. அத்தரி என்னும் கோவேறு கழுதையைப்பற்றி சொல்லாய்வு செய்துமிருக்கிறார். கந்தி, கவுந்தி என்பன அருகக்

கடவுளைத் தொழும் சமணப்பெண் துறவிகள் என்றார். அவ்வை என்ற சொல் வயது முதிர்ந்த பெண்ணைக் குறிப்பதாகச் சொல்லும் இவர், அவ்வை ஏன் இளமையில் கிழவியானாள் என்பதை விளக்க முற்படவில்லை" இப்படிப் பகுத்தறிவு ஆய்வாளராக மு.சிவகுருநாதனால் புகழப்படும் மயிலை சீனி.வேங்கடசாமியை -

தமிழையே வணிக மாக்கி
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்ப தற்கு
தலைமுறை தலைமு றைக்கும்
தமிழ்முத லாக்கிக் கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்சீ னிவேங்க டத்தின்
கால்தூ சும்பெறா றென்பேன்!

- என்று போற்றிப் பாடுகிறார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள். ஆய்வுப் பேரறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் 1981ஆம் ஆண்டு மே திங்கள் 8ஆம் நாள் தன் ஆய்வை நிறுத்தி, மரணத்தின் மூலம் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

இவரை நாம் மறக்க முடியுமா?

# தமிழ் அறிஞர்கள் நாள்

**செப்டம்பர் 27, 2025**

https://tan.chicagotamilsangam.org/MayilaiSeeniVenkatasamy/

# மயிலை சீனி. வேங்கடசாமி




தமிழறிஞரும், எழுத்தாளருமாவார். தமிழக வரலாறு பற்றி பல அரிய ஆய்வு நூல்களை எழுதியவர்.

சென்னை மயிலாப்பூரில் (1900) பிறந்தவர். தந்தை சித்த மருத்துவர். பழந்தமிழ் ஓலைச் சுவடிகள், நூல்களைத் தேடித் தேடி சேகரித்து வாசிக்கும் பழக்கம் கொண்டவர். வேங்கடசாமிக்கும் இயல்பிலேயே தமிழில் அதிக ஆர்வம் இருந்தது.

தமிழறிஞர் கோவிந்தராஜன், மகாவித்வான் சண்முகம் பிள்ளை, பண்டிதர் சற்குணர் ஆகியோரிடம் தமிழ் பயின்றார். மயிலை புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளி, சென்னை கலைக் கல்லூரியில் படித்தார். ஓவியக் கலையில் இருந்த ஆர்வத்தால், கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டு, எழும்பூர் ஓவியப் பள்ளியில் சேர்ந்தார்.

சாந்தோம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். ‘திராவிடன்’ இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்றினார். குடியரசு, ஊழியன், செந்தமிழ், ஆனந்தபோதினி,

ஈழகேசரி உள்ளிட்ட இதழ்களில் 200-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார்.

தமிழ்நாட்டு வரலாறு' என்ற நூலில் இலங்கையில் தமிழர் என்ற இவரது ஆய்வுக் கட்டுரையும் இடம்பெற்றது. தமிழக வரலாற்றைக் கட்டமைத்து, ஒழுங்குபடுத்தியதில் முக்கியப் பங்காற்றியவர். பழங்கால ஓவியங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். தமிழ், தமிழர் வரலாறு, கலாச்சாரம், வாழ்க்கை முறை, இலக்கியம், இயல், இசை, நாடகம் என இவர் ஆய்வு மேற்கொள்ளாத துறைகளே இல்லை.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். 'தலைமுறைக்குத் தமிழ் முதலாக்கிக்கொண்ட பல்கலைத் தலைவன் எல்லாம் தமிழ்ச் சீனி வேங்கடத்தின் கால்தூசும் பெறாதார் என்பேன்' என்று பாவேந்தர் பாரதிதாசன் இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

படைப்பாளி, வரலாற்று அறிஞர், சொல்லாய்வு நிபுணர், கல்வெட்டு, சாசனம், தொல்லியல் களங்களில் முத்திரை பதித்தவர், பன்மொழிப் புலவர், சமூகவியல் அறிஞர் என பல்வேறு பரிமாணங்கள் கொண்ட மயிலை சீனி.வேங்கடசாமி 80-வது வயதில் (1980) மறைந்தார்.

**படைப்புகள்**

- 1936 – கிறித்தவமும் தமிழும்
- 1940 – பௌத்தமும் தமிழும்
- 1943 – இசைத் திருமணம் (சீவக சிந்தாமணியில் காணப்படும் இசைக் கூறுகள் பற்றிய சிறு நூல்)
- 1944 – இறையனார் அகப்பொருள் ஆராய்ச்சி – சிறுநூல்
- 1950 – மத்த விலாசம் – மொழிபெயர்ப்பு – சிறுநூல்
- 1950 – மகாபலிபுரத்து ஜைன சிற்பம்
- 1952 – பௌத்தக்கதைகள்
- 1954 – சமணமும் தமிழும் (முதற்பகுதி)

- 1955 – மகேந்திரவர்மன் – மயிலை நேமிநாதர் பதிகம் – மயிலாப்பூர் வரலாறு
- 1956 – கௌதம புத்தர்
- 1956– தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
- 1957 – வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்
- 1958 – அஞ்சிறைத் தும்பி (சொல் ஆராய்ச்சிக் கட்டுரைகள்)
- 1958 – மூன்றாம் நந்திவர்மன்
- 1959 – மறைந்துபோன தமிழ் நூல்கள்
- 1959 – சாசனச் செய்யுள் மஞ்சரி
- 1960 – புத்தர் ஜாதகக் கதைகள்
- 1961 –மனோன்மணியம் – பதிப்பு
- 1962 – பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்
- 1965 – உணவுநூல்
- 1966 – துளு நாட்டு வரலாறு (கி.பி. 2ஆம் நூற்றாண்டு)
- 1966 – சமயங்கள் வளர்த்த தமிழ் (கட்டுரைத் தொகுதி)
- 1967 – இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்
- 1967 – நுண்கலைகள்
- 1970 – சங்க கால தமிழக வரலாற்றில் சில செய்திகள்
- 1974 – பழங்காலத் தமிழ் வாணிகம் (சங்க காலம்)
- 1974 – கொங்கு நாட்டு வரலாறு (பழங்காலம் கி.பி.250 வரையில்)
- 1976 – களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
- 1977 – இசைவாணர் கதைகள்
- 1981 – சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டுழுத்துக்கள்
- 1983 – தமிழ்நாட்டு வரலாறு (சங்க காலம் – அரசியல்) (இயல்கள் 4,5,6,10 மட்டும்)

# மயிலை சீனி.வேங்கடசாமி



ராஜலட்சுமி சிவலிங்கம்

*தமிழ் அறிஞர், ஆய்வாளர்*

**சிறந்த தமிழ் அறிஞர், வரலாற்று ஆய்வாளரான மயிலை சீனி.வேங்கடசாமி (Mayilai Seeni.Venkatasami) பிறந்த தினம் இன்று (டிச.16). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:**

* சென்னை மயிலாப்பூரில் (1900) பிறந்தவர். தந்தை சித்த மருத்துவர். பழந்தமிழ் ஓலைச் சுவடிகள், நூல்களைத் தேடித் தேடி சேகரித்து வாசிக்கும் பழக்கம் கொண்டவர். வேங்கடசாமிக்கும் இயல்பிலேயே தமிழில் அதிக ஆர்வம் இருந்தது.

* தமிழறிஞர் கோவிந்தராஜன், மகாவித்வான் சண்முகம் பிள்ளை, பண்டிதர் சற்குணர் ஆகியோரிடம் தமிழ் பயின்றார். மயிலை புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளி, சென்னை கலைக் கல்லூரியில் படித்தார். ஓவியக் கலையில் இருந்த ஆர்வத்தால், கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டு, எழும்பூர் ஓவியப் பள்ளியில் சேர்ந்தார்.

* சாந்தோம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 'திராவிடன்' இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்றினார். குடியரசு, ஊழியன், செந்தமிழ், ஆனந்தபோதினி, ஈழகேசரி உள்ளிட்ட இதழ்களில் 200-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார்.

* கி.பி. 3-ம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ம் நூற்றாண்டு வரையிலான காலங்களில் ஆட்சிபுரிந்த மன்னர்கள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டார். தமிழகம் முழுவதும் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்றும் ஆய்வு செய்தார். தமிழகத்தின் நிலை, ஆண்ட மன்னர்கள், கலாச்சாரம் உள்ளிட்ட பல அம்சங்களையும் ஆராய்ந்தறிந்து துளுநாட்டு வரலாறு, கொங்குநாட்டு வரலாறு உள்ளிட்ட நூல்களை எழுதினார்.

* கல்வெட்டுகள், செப்பேடுகள் குறித்து ஆராய்ந்து, தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் ஆகிய துறைகளில் அரிய களப்பணிகள் ஆற்றினார். பிராமி, கிரந்தம், தமிழ் என அனைத்து எழுத்துமுறைக் கல்வெட்டுகளையும் படித்தறிந்து ஆராயும் திறன் பெற்றிருந்தார்.

* கன்னடம், மலையாளம், பாலி, சமஸ்கிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். மலையாளத்தில் இருந்து சில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். புத்த, சமண சமயக் கோயில்கள், தொல்லியல் களங்களை ஆய்வு செய்தார். மகேந்திரவர்மன் காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்பங்கள், ஓவியங்கள், பாறைக் கோயில்கள், கட்டிடக் கலையின் தன்மைகளை ஆராய்ந்தார்.

* மகேந்திரவர்மன், கவுதம புத்தர், புத்தர் ஜாதகக் கதைகள், வாதாபிகொண்ட நரசிம்மவர்மன், இறைவன் ஆடிய ஏழுவகைத் தாண்டவங்கள், சமயங்கள் வளர்த்த தமிழ் உள்ளிட்ட 33 நூல்களைப் படைத்துள்ளார்.

* 'தமிழ்நாட்டு வரலாறு' என்ற நூலில் இலங்கையில் தமிழர் என்ற இவரது ஆய்வுக் கட்டுரையும் இடம்பெற்றது. தமிழக வரலாற்றைக் கட்டமைத்து, ஒழுங்குபடுத்தியதில் முக்கியப் பங்காற்றியவர். பழங்கால ஓவியங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். தமிழ், தமிழர் வரலாறு, கலாச்சாரம், வாழ்க்கை முறை, இலக்கியம், இயல், இசை, நாடகம் என இவர் ஆய்வு மேற்கொள்ளாத துறைகளே இல்லை.

* தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். 'தலைமுறைக்குத் தமிழ் முதலாக்கிக்கொண்ட பல்கலைத் தலைவன்

எல்லாம் தமிழ்ச் சீனி வேங்கடத்தின் கால்தூசும் பெறாதார் என்பேன்' என்று பாவேந்தர் பாரதிதாசன் இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

* படைப்பாளி, வரலாற்று அறிஞர், சொல்லாய்வு நிபுணர், கல்வெட்டு, சாசனம், தொல்லியல் களங்களில் முத்திரை பதித்தவர், பன்மொழிப் புலவர், சமூகவியல் அறிஞர் என பல்வேறு பரிமாணங்கள் கொண்ட மயிலை சீனி.வேங்கடசாமி 80-வது வயதில் (1980) மறைந்தார்.

# மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுகள்

- https://www.tamilvu.org/ta/library-ln00219-html-ln00219p10-275238

"ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம்; பளபளக்கும் வழுக்கைத் தலை; வெண்மை படர்ந்த புருவங்களை எடுத்துக் காட்டும் அகன்ற நெற்றி; கனவு காணும் கண்ணிமைகளைக் கொண்ட வட்ட முகம்; எடுப்பான மூக்கு; படபடவெனப் பேசத் துடிக்கும் மெல்லுதடுகள்; கணுக்கால் தெரியக் கட்டியிருக்கும் நான்கு முழ வெள்ளை வேட்டி; காலர் இல்லாத முழுக்கைச் சட்டை; சட்டைப் பையில் மூக்குக் கண்ணாடி; பவுண்டன் பேனா; கழுத்தைச் சுற்றி மார்பின் இருபுறமும் தொங்கும் மேல் உத்தரீயம்; இடது கரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் புத்தகப் பை. இப்படியான தோற்றத்துடன் சென்னை மியூசியத்தை அடுத்த கன்னிமாரா லைப்ரெரியை விட்டு வேகமாக நடந்து வெளியே வருகிறாரே! அவர்தான் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்."

எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணன் அவர்களின் மேற்கண்ட விவரிப்பு, அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களைக் கண்முன் காணும் காட்சி அனுபவத்தைத் தருகிறது. திருமணம் செய்து கொள்ளாமல், இல்லறத் துறவியாக வாழ்ந்தவர். எண்பதாண்டு வாழ்க்கைக் காலத்தில், அறுபது ஆண்டுகள் முழுமையாகத் தமிழியல் ஆய்வுப் பணிக்கு ஒதுக்கியவர்.

இருபதாம் நூற்றாண்டில் பல புதிய தன்மைகள் நடைமுறைக்கு வந்தன. அச்சு எந்திரத்தைப் பரவலாகப் பயன்படுத்தும் வாய்ப்பு உருவானது. சுவடிகளிலிருந்து அச்சுக்குத் தமிழ் நூல்கள் மாற்றப் பட்டன. இதன்மூலம் புத்தக உருவாக்கம், இதழியல் உருவாக்கம், நூல் பதிப்பு ஆகிய பல துறைகள் உருவாயின. இக் காலங்களில்தான் பழந்தமிழ் நூல்கள் பரவலாக அறியப்பட்டன. இலக்கிய, இலக்கணப் பிரதிகள் அறியப்பட்டதைப்போல், தமிழர்களின் தொல்பழங்காலம்

குறித்தும் பல புதிய கண்டுபிடிப்புகள் வெளிவந்தன. பிரித்தானியர் களால் உருவாக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வுத்துறை பல புதிய வரலாற்றுத் தரவுகளை வெளிக்கொண்டு வந்தது. பாரம்பரியச் சின்னங்கள் பல கண்டறியப்பட்டன. தொல்லெழுத்துக்கள் அறியப்பட்டன. பல்வேறு இடங்களில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டன. தமிழ் மக்களின் எழுத்துமுறை, இலக்கிய, இலக்கண உருவாக்கமுறை ஆகியவை குறித்து, இந்தக் கண்டுபிடிப்புகள் மூலம் புதிதாக அறியப்பட்டது. அகழ்வாய்வுகள் வழிபெறப்பட்ட காசுகள் புதிய செய்திகளை அறிய அடிப்படையாக அமைந்தன. வடக்கு, தெற்கு என இந்தியாவின் பண்பாட்டுப் புரிதல் சிந்துசமவெளி அகழ்வாய்வு மூலம் புதிய விவாதங்களுக்கு வழிகண்டது.

தமிழகச் சூழலில், தொல்பொருள் ஆய்வுகள் வழி பல புதிய கூறுகள் உறுதிப்படுத்தப்பட்டன. ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு அகழ் வாய்வுகள்; தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய காலப் பொருட்கள், ஓவியங்கள் ஆகியவை தமிழக வரலாற்றைப் புதிய தலைமுறையில் எழுதுவதற்கு அடிகோலின. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் மேலே விவரிக்கப்பட்ட சூழலில்தான், தமது ஆய்வுப் பணியைத் தொடங்கினார்.

வேங்கடசாமி சுயமரியாதை இயக்கச் சார்பாளராக வாழ்வைத் தொடங்கினார். பின்னர் பௌத்தம், சமணம் ஆகிய சமயங்கள் குறித்த அக்கறை உடையவராக இருந்தார். இவ்வகை மனநிலையோடு, தமிழ்ச் சூழலில் உருவான புதிய நிகழ்வுகளைக் குறித்து ஆய்வுசெய்யத் தொடங்கினார். கிறித்தவம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்கள், தமிழியலுக்குச் செய்த பணிகளைப் பதிவு செய்தார். இவ்வகைப் பதிவுகள் தமிழில் புதிய துறைகளை அறிமுகப்படுத்தின. புதிய ஆவணங்கள் மூலம், தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வரலாறுகளை எழுதினார். சங்க இலக்கியப் பிரதிகள், பிராமி கல்வெட்டுகள், பிற கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலியவற்றை வரலாறு எழுதுவதற்குத் தரவுகளாகக் கொண்டார். கலைகளின்மீது ஈடுபாடு

உடைய மன நிலையினராகவே வேங்கடசாமி இளமை முதல் இருந்தார். தமிழ்க் கலை வரலாற்றை எழுதும் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். கட்டடம், சிற்பம், ஓவியம் தொடர்பான இவரது ஆய்வுகள், தமிழ்ச் சமூக வரலாற்றுக்குப் புதிய வரவாக அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில் இந்தியவியல் என்ற வட்டத்திற்குள் தமிழகத்தின் வரலாறும் பேசப்பட்டது. இந்திய வியலைத் திராவிட இயலாகப் படிப்படியாக அடையாளப் படுத்தும் செயல் உருப்பெற்றது. இப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியவர் வேங்கடசாமி அவர்கள். இன்று, திராவிட இயல் தமிழியலாக வளர்ந்துள்ளது. இவ் வளர்ச்சிக்கு வித்திட்ட பல அறிஞர்களுள் வேங்கடசாமி முதன்மையான பங்களிப்பாளர் ஆவார்.

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் வரலாற்றுச் சுவடுகள் அடங்கிய - *இந்திய இலக்கியச் சிற்பிகள்* மயிலை சீனி. வேங்கடசாமி என்ற நூலை சாகித்திய அகாதெமிக்காக எழுதும்போது இத்தொகுதி களை உருவாக்கினேன். அப்போது அவற்றை வெளியிட நண்பர்கள் வே. இளங்கோ, ஆர். இராஜாராமன் ஆகியோர் திட்டமிட்டனர். ஆனால் அது நடைபெறவில்லை. அத்தொகுதிகள் இப்போது வெளிவருகின்றன.

இளங்கணி பதிப்பகம் பாவலர் பாவேந்தர் பாரதிதாசனின் அனைத்துப் படைப்புகளையும் ஒரே வீச்சில் '*பாவேந்தம்*' எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளதை தமிழுலகம் அறியும். அந்த வரிசையில் *மயிலை சீனி. வேங்கடசாமி* அவர்களின் உழைப்பால் விளைந்த அறிவுத் தேடல்களை ஒரே வீச்சில் பொருள்வழிப் பிரித்து முழுமைமிக்க படைப்புகளாக 1998இல் உருவாக்கினேன். அதனை வெளியிட இளங்கணிப் பதிப்பகம் இப்போது முன்வந்துள்ளது. இதனைப் பாராட்டி மகிழ்கிறேன். தமிழர்கள் இத்தொகுதிகளை வாங்கிப் பயன்பெறுவர் என்று நம்புகிறேன்.

சுயமரியாதை இயக்க இதழ்களில் செய்திக் கட்டுரைகளை எழுதுவதைத் தமது தொடக்க எழுத்துப் பயிற்சியாக இவர்

கொண்டிருந்தார். அது இவருடைய கண்ணோட்ட வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தியுள்ளது.

-

கிறித்தவ சபைகளின் வருகையால் தமிழில் உருவான நவீன வளர்ச்சிகளைப் பதிவு செய்யும் வகையில் தமது முதல் நூலை இவர் உருவாக்கினார். தமிழ் உரைநடை, தமிழ் அச்சு நூல் போன்ற துறைகள் தொடர்பான ஆவணம் அதுவாகும்.

-

பௌத்தம் தமிழுக்குச் செய்த பங்களிப்பை மதிப்பீடு செய்யும் நிலையில் இவரது அடுத்தக் கட்ட ஆய்வு வளர்ந்தது. பௌத்தக் கதைகள் மொழியாக்கம் மற்றும் தொகுப்பு, புத்த ஜாதகக் கதைத் தொகுப்பு, கௌதம புத்தர் வாழ்க்கை வரலாறு என்ற பல நிலைகளில் பௌத்தம் தொடர்பான ஆய்வுப் பங்களிப்பை வேங்கடசாமி செய்துள்ளார்.

-

சமண சமயம் மீது ஈடுபாடு உடையவராக வேங்கடசாமி இருந்தார். மணிமேகலை, சீவக சிந்தாமணி, ஆகியவற்றை ஆய்வதின் மூலம் தமிழ்ச் சூழலில் சமண வரலாற்றை ஆய்வு செய்துள்ளார். சமண சமய அடிப்படைகளை விரிவாகப் பதிவு செய்துள்ளார். சமணச் சிற்பங்கள், குறித்த இவரது ஆய்வு தனித் தன்மையானது.

-

பல்வேறு சாசனங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ஓலைச் சுவடிகளிலிருந்து இலக்கியங்கள், இலக்கணங்கள் அச்சு வாகனம் ஏறின. இந்தப் பின்புலத்தில் கி.மு. 5 முதல் கி.மு. 9ஆம் நூற்றாண்டு முடிய உள்ள தமிழ்ச் சமூகத்தின் ஆட்சி வரலாற்றை இவர் ஆய்வு செய்தார். பல்லவ மன்னர்கள் மூவர் குறித்த தனித்தனி நூல்களைப் படைத்தார். இதில் தமிழகச் சிற்பம் மற்றும் கோயில் கட்டடக்கலை வரலாற்றையும் ஆய்வு செய்தார்.

-

அண்ணாமலைப் பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் நூல்களின் கால ஆய்விலும் இவர் அக்கறை செலுத்தினார். தொல்காப்பியம், சிலப்பதிகாரம் குறித்த கால ஆய்வில் ச. வையாபுரிப்பிள்ளை போன்றோர் கருத்தை மறுத்து ஆய்வு

நிகழ்த்தியுள்ளார். இச் சொற்பொழிவின் இன்னொரு பகுதியாக சங்கக் காலச் சமூகம் தொடர்பான ஆய்வுகளிலும் கவனம் செலுத்தினார்.

-

சென்னைப் பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவில் சேரன் செங்குட்டுவனை ஆய்வுப் பொருளாக்கினார். இதன் தொடர்ச்சியாக கி.பி. 3-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழகத்தின் வரலாற்றைப் பல நூல்களாக எழுதியுள்ளார். சேர சோழ பாண்டியர், பல குறுநில மன்னர்கள் குறித்த விரிவான ஆய்வை வேங்கடசாமி நிகழ்த்தியுள்ளார். இதன் தொடர்ச்சியாகக் களப்பிரர் தொடர்பான ஆய்வையும் செய்துள்ளார். இவ் வாய்ப்புகளின் ஒரு பகுதியாக அன்றைய தொல்லெழுத்துக்கள் குறித்த கள ஆய்வு சார்ந்து, ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

-

ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் அதன் பாரம்பரியச் செழுமை குறித்த அறியும் தரவுகள் தேவைப்படுகின்றன. இவற்றை ஆவணப் படுத்துவது மிகவும் அவசியமாகும். மறைந்து போனவற்றைத் தேடும் முயற்சி அதில் முக்கியமானதாகும். இப் பணியையும் வேங்கடசாமி மேற்கொண்டிருந் தார். அரிய தரவுகளை இவர் நமக்கு ஆவணப்படுத்தித் தந்துள்ளார்.

-

தமிழர்களின் கலை வரலாற்றை எழுதுவதில் வேங்கடசாமி அக்கறை செலுத்தினார். பல அரிய தகவல்களை இலக்கியம் மற்றும் சாசனங்கள் வழி தொகுத்துள்ளார். அவற்றைக் குறித்து சார்பு நிலையில் நின்று ஆய்வு செய்துள்ளார். ஆய்வாளருக்குரிய நேர்மை, விவேகம், கோபம் ஆகியவற்றை இவ்வாய்வுகளில் காணலாம்.

-

பதிப்பு, மொழிபெயர்ப்பு ஆகிய பணிகளிலும் வேங்கடசாமி ஈடுபட்டதை அறிய முடிகிறது.

-

இவரது ஆய்வுப் பாதையின் சுவடுகளைக் காணும்போது, தமிழியல் தொடர்பான ஆவணப்படுத்தம், தமிழருக்கான வரலாற்று வரைவு, தமிழ்த் தேசிய இனத்தின் கலை வரலாறு மற்றும் அவைகள் குறித்த இவரது கருத்து நிலை ஆகிய செயல்பாடுகளை நாம் காணலாம்.

# மயிலை சீனி. வேங்கடசாமி

# ஆய்வுக் களஞ்சியம்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%AE%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%88_%E0%AE%9A%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BF._%E0%AE%B5%E0%AF%87%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%9F%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF_%E0%AE%86%E0%AE%AF%E0%AF%8D%E0%AE%B5%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%B3%E0%AE%9E%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D_6

## பதிப்புரை

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியும் தமிழுக்கும், தமிழினத்திற்கும் புகழ்பூத்த பொற்காலமாகும். தமிழ்மொழியின் மீட்டுருவாக்கத்திற்கும், தமிழின மீட்சிக்கும் வித்தூன்றிய காலம். தமிழ்மறுமலர்ச்சி வரலாற்றில் ஓர் எல்லைக் கல்.

இக்காலச் சூழலில்தான் தமிழையும், தமிழினத்தையும் உயிராகவும் மூச்சாகவும் கொண்ட அருந்தமிழ் அறிஞர்களும், தலைவர்களும் தோன்றி மொழிக்கும், இனத்திற்கும் பெரும் பங்காற்றினர். இப்பொற்காலத்தில்தான் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் 6.12.1900இல் தோன்றி 8.5.1980இல் மறைந்தார். வாழ்ந்த காலம் 80 ஆண்டுகள். திருமணம் செய்யாமல் துறவு வாழ்க்கை மேற்கொண்டு தமிழ் முனிவராக வாழ்ந்து அரை நூற்றாண்டுக்கு மேல் அரிய தமிழ்ப் பணி செய்து மறைந்தவர். தமிழ்கூறும் நல்லுலகம் வணங்கத்தக்கவர்.

இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் தமிழினம் தன்னை உணர்வதற்கும், தலைநிமிர்வதற்கும், ஆய்வாளர்கள் ஆய்வுப் பணியில் மேலாய்வை மேற்கொள்வதற்கும் வழிகாட்டுவனவாகும். ஆய்வுநோக்கில் விரிந்த பார்வையுடன் தமிழுக்கு அழியாத அறிவுச் செல்வங்களை வைப்பாக வைத்துச் சென்றவர். தமிழ் - தமிழரின் அடையாளங்களை மீட்டெடுத்துத்தந்த தொல்தமிழ் அறிஞர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவர். தமிழ்மண்ணில் 1937-1938இல் நடந்த முதல் இந்தி எதிர்ப்புப் போரை முன்னெடுத்துச்சென்ற தலைவர்கள், அறிஞர்கள் வரிசையில் இவரும் ஒருவர். வரலாறு, இலக்கியம்,

கலை, சமயம் தொடர்பான ஆய்வு நூல்களையும், பொதுநலன் தொடர்பான நூல்களையும், பன்முகப் பார்வையுடன் எழுதியவர்.

பேராசிரியர் முனைவர் வீ. அரசு அவர்கள் எழுதிய சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' நூல்வரிசையில் மயிலை சீனி. வேங்கடசாமி பற்றிய வரலாற்று நூலில் *ஆவணப்பணி*, *வரலாறு எழுது பணி*, *கலை வரலாறு*, *கருத்து நிலை* ஆகிய பொருள்களில் இவர்தம் நுண்மாண் நுழைபுல அறிவினை மிக ஆழமாகப் பதிவுசெய்துள்ளார்.

'முறையான தமிழ் இலக்கிய வரலாற்றை இனி எழுதுவதற்கு எதிர்கால ஆய்வாளர்களுக்கு வழிகாட்டிச் சென்றவர்' - என்பார் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள். 'மயிலை சீனி. வேங்கடசாமி ஆண்டில் இளையவராக இருந்தாலும், ஆராய்ச்சித் துறையில் முதியவர், நல்லொழுக்கம் வாய்ந்தவர். நல்லோர் கூட்டுறவைப் பொன்னே போல் போற்றியவர்.' என்று சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்களும், "எண்பதாண்டு வாழ்ந்து, தனிப் பெரும் துறவுபூண்டு, பிறர் புகாத ஆய்வுச்சூழலில் புகுந்து தமிழ் வளர்த்த, உலகச் சமயங்களையும், கல்வெட்டு காட்டும் வரலாறுகளையும், சிற்பம் உணர்த்தும் கலைகளையும் தோய்ந்து ஆய்ந்து தோலா நூல்கள் எழுதிய ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கட்குத் தமிழ்ப் பேரவைச் செம்மல் என்ற பட்டத்தினை வழங்கியும், தமிழ்ச் செம்மல்கள் பேரவையின் ஓர் உறுப்பினராக ஏற்றுக்கொண்டும், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் பாராட்டிச் சிறப்பிக்கிறது" என்று இப்பெருந்தமிழ் அறிஞரை அப்பல்கலைக் கழகம் போற்றியுள்ளதை மனத்தில் கொண்டு இவரின் அனைத்துப் படைப்புகளையும் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் வீ. அரசு அவர்கள் - போற்றுதலுக்கும், புகழுக்கும் உரிய இவ்வாராய்ச்சிப் பேறறிஞரின் நூல்கள் அனைத்தையும் பொருள்வழிப் பிரித்து, எங்களுக்குக் கொடுத்து உதவியதுடன், பதிப்பாசிரியராக இருந்தும், வழிகாட்டியும், இவ்வாராய்ச்சித் தொகுதிகளை ஆய்வாளர்களும், தமிழ் உணர்வாளர்களும் சிறந்த பயன்பெறும் நோக்கில் வெளியிடுவதற்கு பல்லாற்றானும் உதவினார். அவருக்கு எம் நன்றி. இவ்வருந்தமிழ்ச் செல்வங்களை அனைவரும் வாங்கிப் பயனடைய வேண்டுகிறோம்.

இவ்வாராய்ச்சி நூல்கள் எல்லா வகையிலும் சிறப்போடு வெளிவருவதற்கு உதவிய அனைவர்க்கும் நன்றி.

**- பதிப்பாளர்**

## தமிழ்நாட்டின் உண்மை வரலாற்றை வெளிக்கொண்டுவர

## தன் வாழ்வை அர்ப்பணித்த மயிலை சீனி.வேங்கடசாமி

https://madrasreview.com/society/life-story-of-tamil-research-scholar-mayilai-seeni-vengadasamy/

***மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு எழுதப்பட்ட சிறப்புப் பதிவு.***

ஆய்வறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி சென்னையின் மயிலாப்பூர் பகுதியில் 1900-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் நாள் பிறந்தார்.

வேங்கடசாமி அவரது அண்ணன் கோவிந்தராஜனிடம் ஆரம்பப் படிப்பை படித்தார். அதன்பின் மகா வித்வான் சண்முகர் மற்றும் பண்டித சற்குணர் ஆகியோரிடம் தமிழ் படித்தார்.

நீதிக்கட்சி நடத்திய திராவிடன் இதழின் ஆசிரியர் குழுவில் பணிக்கு சேர்ந்தார். ஓவியக்கலையில் கொண்ட ஆர்வத்தால் சில காலம் எழும்பூர் ஓவியப் பள்ளியில் படித்தார். குடும்பப் பொருளாதாரச் சூழல் காரணமாக ஆசிரியர் பயிற்சி பெற்று சாந்தோம் மாநகராட்சிப் பள்ளியில் ஆசிரியராகப் பணிக்குச் சேர்ந்தார்.

படித்தது பள்ளி ஆசிரியர் பயிற்சி என்றாலும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு இணையாக இவர் ஆய்வுப் பேரறிஞராகத் திகழ்ந்தார்

### தொல்லியல் துறையில் ஆற்றிய பணி

தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் ஆகிய துறைகளில் அரிய களப்பணியாற்றினார். தென்னிந்திய எழுத்து முறைகள் யாவற்றையும் கற்றுத் தேர்ந்தார். பிராமி, கிரந்தம், தமிழ் என அனைத்து எழுத்துமுறை


கல்வெட்டுகளைப் படித்து ஆராயும் திறன் பெற்றார். கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளையும் கற்றறிந்திருந்தார்.

## தொல்காப்பியர் காலத்தால் முற்பட்டவர் என்பதை நிரூபித்தார்

தொல்காப்பியர் காலத்தால் பிற்பட்டவர் என்று பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை கூறியபோது அவரின் வாதத்தை முற்றிலும் நிராகரித்தார் மயிலையார். பிராமி எழுத்து வருவதற்கு முன்பே தமிழ் எழுத்து வழக்கில் இருந்ததை சான்றுகளுடன் நிறுவி காலத்தால் முற்பட்டவர் தொல்காப்பியர் என்றார்.

## சமண, பௌத்த ஆய்வுகள்


வரலாற்றாளர்கள் அதிகம் கவனம் செலுத்தாத சமண, புத்த சமய கோயில்களையும் தொல்லியல் களங்களையும் ஆய்வு செய்தார். களப்பிரர் காலம் குறித்த இவரது ஆய்வும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. கி.பி 5 முதல் 9-ம் ஆண்டு வரையிலான தமிழ்நாட்டின் வரலாற்றை ஆய்வு செய்து வெளிக்கொண்டு வந்ததில் வேங்கடசாமி அவர்களின் பங்கு முக்கியமானது.




**மணிமேகலை, சம்பாபதி, தாராதேவி ஆகிய பௌத்த சிறு தெய்வங்களை இன்று காளி, பிடாரி, திரௌபதி அம்மன் ஆகிய பெயர்களில் இந்து தெய்வங்களாக மாற்றிவிட்டார்கள் என்ற வரலாற்று உண்மைகளைத் தன் ஆய்வின் மூலம் பதிவு செய்கிறார் மயிலை சீனி.வேங்கடசாமி.**

**எழுதிய நூல்கள்**

இரண்டு முறை சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். பழங்காலத் தமிழ் வாணிகம்,கொங்கு நாட்டு வரலாறு,களப்பிரர் ஆட்சியில் தமிழகம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட வரலாற்று புத்தகங்களை எழுதியுள்ளார்.




1936 – கிறித்தவமும் தமிழும்

1940 – பௌத்தமும் தமிழும்

1943 – காந்தருவதத்தையின் இசைத் திருமணம் (சிறு வெளியீடு)

1944 – இறையனார் அகப்பொருள் ஆராய்ச்சி (சிறு வெளியீடு)

1948 – இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்

1950 – மத்த விலாசம் – மொழிபெயர்ப்பு, மகாபலிபுரத்து ஜைன சிற்பம்

1952 – பௌத்தக் கதைகள்

1954 – சமணமும் தமிழும்

1955 – மகேந்திர வர்மன், மயிலை நேமிநாதர் பதிகம்

1956 – கௌதம புத்தர், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

1957 – வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்

1958 – அஞ்சிறைத் தும்பி, மூன்றாம் நந்தி வர்மன்

1959 – மறைந்துபோன தமிழ் நூல்கள், சாசனச் செய்யுள் மஞ்சரி

1960 – புத்தர் ஜாதகக் கதைகள்

1961 – மனோன்மணீயம்

1962 – பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்

1965 – உணவு நூல்

1966 – துளு நாட்டு வரலாறு, சமயங்கள் வளர்த்த தமிழ்

1967 – நுண்கலைகள்

1970 – சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்

1974 – பழங்காலத் தமிழர் வாணிகம், கொங்குநாட்டு வரலாறு

1976 – களப்பிரர் ஆட்சியில் தமிழகம்


1977 – இசைவாணர் கதைகள்

1981 – சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துகள்

1983 – தமிழ்நாட்டு வரலாறு: சங்ககாலம் – அரசியல் இயல்கள் 4, 5, 6, 10 – தமிழ்நாட்டரசு வெளியீடு

பாண்டிய வரலாற்றில் ஒரு புதிய செய்தி (சிறு வெளியீடு – ஆண்டு இல்லை)

அவரது மொத்த ஆய்வுகளையும் தொகுத்து 'மயிலை சீனி வேங்கடசாமி ஆய்வுக் களஞ்சியம்' என்ற பெயரில் 20 தொகுதிகளை பேராசிரியர் வீ.அரசு வெளியிட்டுள்ளார்.




**சுயமரியாதை இயக்கம்**

திராவிடன், குடிஅரசு, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், ஆராய்ச்சி, ஊழியன், இலட்சுமி போன்ற இதழ்களில் ஏராளமான ஆய்வுகட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

குடியரசு கட்டுரை ஒன்றில் "வேதம், புராணம், கடவுள், கோயில், விதி, வினை என்று சொல்லிக்கொண்டு நாளுக்கு நாள் முட்டாள்களாகிக் கொண்டிருக்கும் வழக்கத்தை விட்டுவிட்டு எந்த விசயத்தையும் பகுத்தறிவு- கொண்டு ஆராயும் படி கேட்டுக்கொள்கிறேன்" என்று எழுதிய பகுத்தறிவாளர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள்.

**வேங்கடசாமியை பாராட்டிய பாவேந்தர்**

அதனால் தான் மயிலை சீனி.வேங்கடசாமியை,

"தமிழையே வணிக மாக்கி
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்ப தற்கு
தலைமுறை தலைமு றைக்கும்
தமிழ்முத லாக்கிக் கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்சீ னிவேங்க டத்தின்
கால்தூ சும்பெறா றென்பேன்!

– என்று போற்றிப் பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

ஆய்வுப் பேரறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் 1981-ம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதி தன் ஆய்வை நிறுத்தி, மரணத்தின் மூலம் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

https://panmai2010.wordpress.com/tag/%E0%AE%AE%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%88-%E0%AE%9A%E0%AF%80%E0%AE%A9%E0%AE%BF-%E0%AE%B5%E0%AF%87%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AE%9F%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF/

## தமிழுலகம் மறந்த ஆய்வறிஞர்

# மயிலை சீனி. வேங்கடசாமி

மு.சிவகுருநாதன்

பள்ளி இறுதி வகுப்பைத் (பத்தாம் வகுப்பு) தாண்டாதவர்; அதனால் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணிசெய்யும் வாய்ப்பின்றி இடைநிலை ஆசிரியராக பணிக்காலம் முழுதும் இருந்தவர் மயிலை

சீனி. வேங்கடசாமி. இருப்பினும் பல்கலைக்கழகங்கள் எதுவும் செய்யத்துணியாத ஓர் காரியத்தை செய்து அவர் செய்து முடித்தார். தமிழக வரலாற்றில் இருண்டகாலமாக இருந்த களப்பிரர் காலத்தைப் பற்றி ஆய்வு செய்து, அவரே சொல்கிறபடி விடியற்காலமாக ஆக்கியவர்.

கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, கே.கே.பிள்ளை, சதாசிவ பண்டாரத்தார், மு.அருணாசலம் பிள்ளை, ஔவை துரைசாமிப் பிள்ளை, மா.இராசமாணிக்கனார் போன்ற எந்த வரலாற்று அறிஞராகட்டும், தமிழறிஞராகட்டும் களப்பிரர் போல் இவ்வளவு வெறுப்பு உமிழப்பட்ட அரச வம்சம் இருக்க வாய்ப்பில்லை. இவர்களது மிதமிஞ்சிய சைவப்பற்று மற்றும் சோழப்பெருமை ஆய்வுக் கண்ணோட்டத்தையே சாகடித்தது வரலாற்றெழுதியலின் மாபெரும் அவலம். இவர்களும் இவர்களைப் பின்பற்றி வரலாறு எழுதிய பலரும் களப்பிரர்களையும் அவ்வம்சத்து அரசர்களையும் இருண்ட குலம், இருண்ட காலம், இருள் படர்ந்த காலம், காட்டுமிராண்டிகள், கொள்ளைக்காரர்கள், கொடுங்கோலாட்சி செய்தவர்கள், நாகரீகத்தின் எதிரிகள், கலியரசர்கள், கொடிய அரசர்கள், நாடோடிகள், தமிழ் வாழ்வை – மொழியைச் சீரழித்தவர்கள், மக்களைக் கொன்று செல்வங்களைச் சூறையாடியவர்கள், தமிழ் மொழி – பண்பாட்டை அழித்தவர்கள், அரச பாரம்பரியமற்றவர்கள் என்றெல்லாம் வசைமாரி பொழிந்தனர்.

எனது மதம், பிறர் மதம் என்று கொள்ளாமல் காய்தல், உவத்தல் இல்லாமல் நடுநிலை நின்று செம்பொருள் காணவேண்டும் என இதற்கென கொள்கை வகுத்து அதன்படி செயலாற்றியவர். இத்தகைய மனப்பான்மை நூலை வாசிப்பவர்களுக்கும் இருக்கவேண்டுமென வலியுறுத்தியவர் மயிலையார். அந்த வகையில் களப்பிரர் ஆட்சியில் தமிழகம், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன

தமிழ் நூல்கள் போன்றவை மிகவும் முக்கியமானவை. இவருடைய எழுத்துப்பணி நீதிக்கட்சியின் திராவிடன் இதழிலிருந்து தொடங்குகிறது. பின்னர் பெரியாரின் குடியரசு இதழ்களில் கட்டுரைகள் எழுதுகிறார். இலட்சுமி, ஆராய்ச்சி, செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், ஆனந்த போதினி, தமிழ்நாடு, ஈழகேசரி இன்னபிற இதழ்களில் இவர் தொடர்ந்து எழுதிவந்துள்ளார்.

சைவப் பாரம்பரியக் குடும்பத்திலிருந்து வந்த மயிலையார் பிறரைப் போல சைவ – சோழப் பெருமை மட்டும் பேசவில்லை. மாறாக ஜனநாயகத் தன்மையோடு களப்பிரர்கள் அரச பாரம்பரியமற்றவர்கள்; இவர்களால் மொழிக்கும் பண்பாட்டிற்கும் எவ்வித பங்களிப்பையும் செய்ய இயலாது என்ற பொய்மையை தோலுரித்தார். இவரது ஆய்வுகளை அடுத்தகட்டத்திற்கு நகர்த்திச் செல்லவேண்டியது தமிழ் ஆய்வுலகத்தின் கடமை. விடியல் பதிப்பகம் வெளியிட்ட களப்பிரர் ஆட்சியில் தமிழகம் நூலில் அ.மார்க்ஸ் விரிவான ஆய்வுரை எழுதியுள்ளார். இதில் மயிலையார் வந்தடைந்த முடிவுகளைத் தாண்டி பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பர்ட்டன் ஸ்டெய்ன் ஆய்வுகளையும் இணைத்து களப்பிரர் ஆய்வில் புது வெளிச்சம் பாய்ச்சுகிறார். மயிலை சீனி. வேங்கடசாமியின் நூல்கள் செம்பதிப்பாக வந்தால் மட்டும் போதாது; ஆய்வுப்பதிப்பாக வெளிவருதல் வேண்டும் என்பதை இது உணர்த்துகிறது. இனியும் தமிழ் ஆய்வுலகம் மயிலையாரை புறக்கணிக்கக்கூடாது.

2001 இல் தமிழக அரசு மயிலையாரின் நூல்களை அரசுடைமையாக்கியது. இருப்பினும் ஆதிக்க, இந்துத்துவ வரலாற்றாய்வாளர்களால் இருண்டகாலம் என இருட்டடிப்பு செய்யப்பட்ட களப்பிரர் காலம், சமண – பவுத்தம் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் முதலியவற்றை தனியாளாய் வெளி உலகிற்குக் கொண்டுவந்த மயிலையாரின் பல்வேறு நூற்கள் இன்று உரிய

பதிப்புகள் பெறாமல் முடங்கிப்போய் உள்ளன. இந்நிலை மாறவேண்டும்.

களப்பிரர் ஆட்சியில் தமிழகம், புத்தரின் வரலாறு, சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் போன்ற ஒருசில நூல்கள் மட்டுமே விடியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பாவை, சந்தியா, எதிர், பூம்புகார், நாம் தமிழர் ஆகிய பதிப்பகங்கள் வெளியிடுகின்றன. இவரது 30 நூல்களை புலவர் கோ.தேவராசன் பதிப்பாசிரியராகக் கொண்டு மீனா கோபால், தேன், எம்.வெற்றியரசி, வசந்தா, சாரதா மாணிக்கம், எம்.ஏழுமலை ஆகிய பதிப்பகங்கள் வெளியீட்டு, தற்போது இவை அச்சில் இல்லாத நிலையே நீடிக்கிறது.

இன்றைய வியாபாரப் பதிப்புலகில் இதை யார் செய்வார்கள் என்பதுதான் சிக்கல். பெரியாருக்கு ஓர் ஆனைமுத்து கிடைத்ததுபோல் மயிலையாருக்கு குறிப்பிடத்தகுந்த யாரும் இல்லாதது பெருத்த ஏமாற்றமளிக்கும் உண்மை.

பல்கலைக் கழகங்களோ, பெருநிறுவனங்களோ, தமிழ்ப் பேராசிரியர்களோ செய்யாத ஆய்வுப்பணிகளை சாதாரண இடைநிலை ஆசிரியர் பணியாற்றிக் கொண்டே செய்து அளப்பரிய சாதனையை நிகழ்த்தியவர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள். எனவேதான் ஆராய்ச்சிப் பேரறிஞர் எனப் போற்றப்பட்டவர். இவர் இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கு முன்னதாக ஓவிய ஆசிரியர் பயிற்சி பெற்றவர். எனவே தமது நூல்களுக்குரிய விளக்கப்படங்களை தாமே அழகுற வரைந்து வெளியிட்டுப் பெருமை சேர்த்தார். அச்சகத்தில் கிரந்த எழுத்துக்கள் இல்லாததால் ஜைனர் என்பது சமணர் என்று அச்சிடப்பட்டுள்ளது. இதை ஜைனர்கள்

பொறுத்துக்கொள்ளவேண்டும் என்கிறார். இதிலிருந்து இவரது பெருந்தன்மை விளங்குகிறது.

அன்றிலிருந்து இன்று வரை பல்கலைக்கழகங்களுக்கும் ஆய்வுகளுக்கும் என்றுமே தீராத பகை போலும். இவைகள் சாதித்தவைகளைவிட தனிநபர் சாதனைகளே மிக அதிகம். தனது ஆய்வுகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை என்பதை பல நூல்களின் முன்னுரைகளில் குறிப்பாலும் வெளிப்படையாகவும் இவர் உணர்த்துகிறார். ஆண்டுகள் பல கடந்தாலும் சூழலில் எந்த மாற்றமுமில்லை. இதனால்தான் பாரதிதாசன்

**"பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச்சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்".**

என்று சினங்கொள்கிறார்.

மயிலையாருக்கு சமண, பவுத்த மதங்களின் மீது தீராக்காதல் இருந்து வந்துள்ளது. அதனால்தான் என்னவோ திருமணம் செய்துகொள்ளாமல் துறவு வாழ்க்கை வாழ்ந்தார் என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. தமிழின்பால் அவருக்கிருந்த பற்று தமிழ் மொழிக்குப் பெருமை செய்தோரைத் தேடிச் சென்று பாராட்டத் தோன்றியிருக்கிறது. எனவேதான் சோழர்கள், சைவம் ஆகியவற்றைத் தாண்டி பிறர் செய்த பணிகளைத் தேடித்தேடித் தொகுத்திருக்கிறார். இங்கு சோழப்பெருமை பேசப்படும் பிற்காலச் சோழர்கள் காலத்தில் குறிப்பாக முதலாம் ராஜராஜன் காலம் தொடங்கி 100 ஆண்டுகளில் தமிழுக்கு எந்தவித பங்களிப்புகளும் இல்லை என்பதுதானே உண்மை.

இக்காலகட்டத்தில் நிறைய சமஸ்கிருத கல்விநிலையங்கள் தொடங்கப்பட்டதை யாரால் மறுக்கமுடியும்?

அன்பழகன், தங்கமணி என்ற உறவினர் வீட்டுக் குழந்தைகள் இவரது வீட்டில் தத்துப்பிள்ளைகளாய் வளர்கிறார்கள். அவர்களது திடீர் மரணம் மயிலையாரை கடுமையாக பாதிக்கிறது. நூலைப்படித்து அதன்மூலம் மனத்துயரைப் போக்க எண்ணி யாப்பெருங்கல விருத்தி என்னும் நூலை எடுத்துப் படித்ததாக எழுதுகிறார்.

மறைந்துபோன குழந்தைகள் போல எண்ணற்ற தமிழ் நூல்கள் மறைந்து போன அவலத்தைத் தேடிக் கண்டு மறைந்து போன நூல்கள் உருவாக்கிய வரலாற்றைக் கூறும்போது துயரம் நம்மையும் பற்றிக்கொள்கிறது. இந்நூலில் 196 மறைந்துபோன நூல்களையும் இன்னும்பிற பெயர் தெரியாத, சிதைவுண்ட நூல்களையும் எடுத்துக்காட்டுகிறார். படையெடுப்பு, கடல்கோள் ஆகியவற்றால் நூல்கள் அழிந்ததைவிட சமயப்பகையாலும் ஆடிப்பெருக்கு, போகி, மாசிமகம், சரஸ்வதி பூசை ஆகிய மூடப்பழக்கத்தாலும் அழிக்கப்பட்டதே ஏராளம்.

1900 டிசம்பர் 16 இல் பிறந்த மயிலையார் 1980 மே 08 இல் இறக்கும்வரை ஓயாது தமிழ்ப் பணியாற்றுயிருக்கிறார். இவரது தேடல் பல்வேறு தளங்களில் புதிய சிந்தனைகளைக் கொண்டு சேர்த்திருக்கிறது. கோயில்களில் நடைபெறும் திருப்பாவாடை நிகழ்வை ஆய்ந்து அது ஓர் இனிப்புப் பண்டம் என்று விளக்குகிறார். அத்திரி எனும் கோவேறு கழுதை பற்றியும் சொல்லாய்வு நடத்துகிறார். கந்தி, கௌந்தி என்பன அருகக் கடவுளைத் தொழும் சமண சமயப் பெண் துறவிகளைக் குறிப்பதை விளக்குகிறார். அவ்வை என்ற சொல் வயது முதிர்ந்த பெண்ணைக் குறிப்பதாகச் சொல்லும் இவர் அவ்வை ஏன் இளமையில் கிழவியாக்கப்பட்டாள் என்பதை விளக்க முற்படுவதில்லை. அதியமான் நெடுமான் அஞ்சி அவ்வைக்கு

நெல்லிக்கனி அளித்த கதையைச் சொல்லும்போதும் தமிழ் மூதாட்டி ஏன் அப்படியானாள் என காண்பதில்லை. ஆனால் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் துலுக்க நாச்சியாரைத் திருமணம் செய்திருந்தால் சுன்னத்து செய்து, மாட்டுக்கறியும் புலால் உணவும் சாப்பிட்டிருக்க வேண்டும் என்று வினா எழுப்பி வடிகட்டின முட்டாள்கள் இதையும் நம்புகிறார்களே என்று ஆதங்கப்படுகிறார்.

பவுத்த-ஜைன மத சிற்பங்களுக்கும் சைவ-வைணவ மத சிற்பங்களுக்கும் உள்ள நுட்பமான வேறுபாட்டை மயிலையார் புலப்படுத்துகிறார். புத்தர், தீர்த்தங்கரர் அருகர் உருவங்களுக்கு மட்டும் இரு கைகளும் ஏனைய சிறு தெய்வங்களுக்கு நான்கு அல்லது எட்டு கைகள் இருக்கின்றன. இதற்கு நேர்மாறாக சிவன், பெருமாள் சிற்பங்களுக்கு நான்கு அல்லது எட்டு கைகளும் சிறு தெய்வங்களுக்கு வெறும் இரண்டு கைகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

வையாபுரிப்பிள்ளை தொல்காப்பிய காலத்தைப் பின்னுக்குத் தள்ளியதை இவரால் பொறுக்க முடிவதில்லை. எனவே மிகக்கடுமையாக சாடுகிறார். பிராமி எழுத்து தமிழுக்கு வருவதற்கு முன்னமே தமிழ் எழுத்துக்கள் வழக்கில் இருந்ததை ஆதாரங்களுடன் நிறுவினார்.

பிராமி எழுத்துக்களை வாசித்து இராவ்சாகிப் எச்.கிருஷ்ண சாஸ்திரி, கே.வி.சுப்பிரமணிய அய்யர், சி.நாராயண ராவ், ஐராவதம் மகாதேவன், டி.வி.மகாலிங்கம் போன்றவர்களுடன் பல இடங்களில் முரண்பட்டும் சிலவற்றில் இசைந்தும் விளக்கம் தருகிறார். இவரது ஆய்வுகளில் சில வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் வாழும் காலத்திலும் இன்றும் பெரும்பாலோரின் புறக்கணிப்பிற்கு உள்ளானவராகவே இவர் உள்ளார்.

அன்றைய காலத்தின் தமிழ்ப் பெருமைக்குள் மட்டும் சிக்கிக் கொண்டவராக மயிலையாரைக் கருத முடிவதில்லை. “மறைமலையடிகளைச் சந்தித்துத் திரும்பும்போது புனித யாத்திரையின் உணர்வு தோன்றுகிறது. இதற்குக் காரணம் சமயப்பற்று, சாத்திரப்பற்று ஆகியன அல்ல; அவரது பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படும் கலப்பற்ற நல்ல இனிய தமிழ்” என்கிறார். இருப்பினும் சமகால அறிஞர்களிடமிருந்து மாறுபட்ட பார்வையை தனது ஆய்வுகளின் வழி வந்தடைந்தார் என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

நரசிம்மவர்ம பல்லவனின் சிறப்புப்பெயர் மாமல்லன் என்பது. இதனாலே இந்நகரம் மாமல்லபுரம் என அழைக்கப்பட்டது. பிறகு மகாபலிபுரம் எனத் திரிந்தது. மகாபலி சக்கரவர்த்திக்கும் இதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இங்குள்ள ஓர் கற்பாறைக் குன்றில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் மகாபாரதக் கதையிலுள்ள அர்ச்சுணன் தபசு என்றும் ராமாயணக்கதையிலுள்ள பகீரதன் தபசு என்றும் இருவேறு கருத்து நிலவுகிறது. இவையிரண்டையும் மறுத்து இரண்டாவத் ஜைனத் தீர்த்தங்கரரான அஜிதநாதசுவாமி புராணத்தில் வரும் சகர சக்கரவர்த்தியின் கதையே இச்சிற்பக்காட்சியில் இருப்பதை மயிலையார் தெளிவுபடுத்துகிறார்.

சமணம் – பவுத்தம் வேறுபாடுகள் படித்தவர்களுக்குக் கூட தெரியவில்லை என்று வருத்தப்படும் மயிலையார் மனுநீதிச்சோழன், தேவரடியார்கள் தானம் (அடிமை வியாபாரம்), பரத நாட்டியம் போன்றவற்றை ஒன்றுமே சொல்லாமல் கடந்துவிடுவது நம்மை அதிர்ச்சியடைய செய்கிறது.

மனுச்சோழன் புராணக்கதையை பெரியபுராணம், சிலப்பதிகாரம்-மணிமேகலை வழியாக எடுத்துக்காட்டுகிறார். இதே கதை மகாவம்சத்தில் கூறப்பட்டாலும் இறந்த மகன் மீண்டும்

உயிர்ப்பிக்கப்பட்டதாக அந்நூல் கூறவில்லை என்பதை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறார். மனுதர்மம், இப்புராணக் கதையின் நம்பகம் குறித்தும் யாதொரு கேள்வியும் எழுப்பவில்லை.

முதலாம் குலோத்துங்க சோழனின் 29 – வது ஆண்டு சாசனம் (கி.பி.1098) தேவரடியார்கள் தானமளிக்கப்பட்டதை (விற்கப்பட்டதை) சொல்லும் மயிலையார் பரத நாட்டியத்தை சொல்லிக்கொடுக்கும் நட்டுவர் எனும் தலைக்கோல் ஆசான்கள் தஞ்சாவூரில் அதிகமாக இருக்கிறார்கள் என்பதோடு முடித்துக்கொள்கிறார். இந்திய நாட்டியங்களில் தலைசிறந்தது என அமெரிக்கர் சொன்னது உண்மை; வெறும் தற்புகழ்ச்சியல்ல என்று குறிப்பிடும் மயிலையார் தேவதாசி முறை ஒழிப்பை சுயமரியாதை இயக்கம் முன்னெடுத்த காலகட்டத்தில் வாழ்ந்தவர் என்பதையும் அவதானிக்கவேண்டியுள்ளது. இவரது கருத்துகள் வெறுமனே கடந்துபோவதாக மட்டும் இருக்கமுடியாது.

குத்தூசி குருசாமி-குஞ்சிதம் அம்மாள் இவர்களைப் பற்றிச் சொல்லும்போது, அம்மாள் தாழ்ந்த குலம் என கருதப்பட்ட ( ஏன் கருதப்பட்டது?!) இசை வேளாளர் குலத்தில் பிறந்தவர்; இவர்களுடைய திருமணம் சாதி மறுப்பு, சீர்சிருத்தத் திருமணம் என்று கூறுவதோடு நில்லாது குஞ்சிதம் அம்மாள் பூ, நகை, குங்குமம் பயன்படுத்தாது குறித்து அவருடன் வாதிட்டதாகக் கூறுகிறார். மேலும் அவர்கள் குழந்தை வேண்டாம் என பல ஆண்டுகளாக கருத்தடை செய்துவந்த நிலை மாறி இரு குழந்தைகள் பிறந்தபோது தாத்தாவின் மகிழ்ச்சிக்கு அளவில்லை என்று சொல்கிறார். குழந்தைப் பெற்றுக்கொள்ள வலியுறுத்தியதையும் குறிப்பிடுகிறார். 1926 இல் எழுதப்பட்ட ஓர் கட்டுரையில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பால்ய விவாகம் ஒழிப்பு ஆகியவற்றை மட்டுமே ஆசார

சீர்திருத்தமாகக் குறிப்பிடுகிறார். ஆனால் எவ்விடத்திலும் தேவதாசி முறை குறித்து எதுவும் சொன்னாரில்லை.

பிணங்களைத் பெட்டிகளில் வைத்து மூடி எடுத்துச் செல்லுதல், எரியூட்டுதல், வாத்தியங்களை விலக்குதல் என சவச்சடங்கில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்கிறார். பிணங்களை புதைப்பதால் தீமை உண்டாகிறது; எரியூட்ட வேண்டும் என்கிறார். புகையைவிட புதைப்பதால் தீமை அதிகம் என்றும் கூறுகிறார். கிருஸ்தவர்கள் வாழ்விலும் சாவிலும் வாசிக்கும் வாத்தியங்களில் வேறுபாடு உண்டு; ஆனால் நம்மவர்களின் வாத்தியங்களில் ராக வேறுபாடு இல்லை என்கிறார். தமிழர் பண்பாடு, இசை, பகுத்தறிவு, அறிவியல் பற்றி பல இடங்களில் எழுதிய மயிலையாரின் இக்கருத்து அதிர்ச்சியளிக்கக்கூடியது.

இம்மாத இலக்கிய இதழொன்றில் பத்தி எழுதும் தமிழவன், சைவச்சார்பு இருப்பினும் மறைமலையடிகள், மனோன்மணியம் சுந்தரனார் போன்றவர்கள் தத்துவவாதிகளே என்று சொல்கிறார். கல்வியறப்புலத்திலிருந்து வந்தவர்களை மட்டும் ஏற்கும் மனச்சாய்வின் வெளிப்பாடு இது. மயிலை சீனி.வேங்கடசாமி போன்றவர்கள் மறக்கக்கடிக்கப்படுவதன் பின்னணியையும் இதனோடு இணைத்துப்பார்க்கலாம்.

இலக்கியச் சான்றுகளின் அடிப்படையிலும் புராணக்கதைகளின் வாயிலாகவும் வரலாறு எழுதுவது முழுமையானதாக இருக்கமுடியாது. அது வெறும் புனைவாகவே இருக்கும். ஒரு நாட்டின் பன்மைத்தன்மைகளைக் கணக்கில்கொண்டு நடுநிலையோடு ஆய்வுநோக்கில் எழுதப்படுவதே வரலாறாக இருக்கமுடியும். அத்தகைய நோக்கில் மயிலையார் ஆய்வுகளை ஆய்வு செய்து அவரது

பணிகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது தமிழ் அறிவுலகத்தின் கடமையாகும்.

(டிசம்பர் 16 மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களின் 114 –வது பிறந்த நாள்.)

# திண்ணை

**தமிழின் முதல் இணைய வாரப்பத்திரிக்கை**

https://old.thinnai.com/%E0%AE%86%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%AA%E0%AF%8D_%E0%AE%AA%E0%AF%87%E0%AE%B0%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%AE%E0%AE%AF%E0%AE%BF/

# ஆராய்ச்சிப் பேரறிஞர்
# மயிலை சீனி.வேங்கடசாமியின் வாழ்வும் பணியும்

முனைவர் க.துரையரசன்

**"தமிழையே வணிகமாக்கித்
தன்வீடும் மக்கள் சுற்றம்
தமிழிலே பிழைப்பதற்கும்
தலைமுறை தலைமுறைக்குத்
தமிழ் முதலாக்கிக் கொண்ட
பல்கலைத் தலைவன் எல்லாம்
தமிழ்ச் சீனி வேங்கடத்தின்
கால்தூசும் பெறாதார் என்பேன்" (தமிழ் நிலம் – 14.10.1952)**

என்று பாரதிதாசனாலேயே பாராட்டப்பட்டவர் தமிழறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி ஆவார். இவருக்கு 16.12.1999-இல் நூற்றாண்டு விழா தமிழக அரசால் நடத்தப்பட்டது. நூற்றாண்டு விழா கண்ட

நாயகரின் வாழ்வும் பணியும் குறித்து விளக்கியுரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோற்றம் : இவர் சென்னையில் உள்ள மயிலாப்பூரில் திரு.சீனிவாச நாயக்கருக்கும் திருமதி.தாயார் அம்மாளுக்கும் மூன்றாவது மகனாராக 16-12-1900-இல் பிறந்தார். இவரது தந்தையாரும் மூத்த சகோதரரும் சித்த மருத்துவத் துறையில் சிறந்து விளங்கினர். இவர்தம் இளைய சகோதரர் சீனி.கோவிந்தராசனாரும் இவரும் தமிழ்ப் பணியில் நாட்டம் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர்.

இளமையும் கல்வியும் : இவர்தம் இளைய சகோதரர் திரு.சீனி.கோவிந்த ராசனாரின் தமிழ்ப்பணி நாட்டம் கண்ட இவருக்கும் தமிழ் மொழியின் மீதும் இலக்கியங்களின் மீதும் ஆர்வம் தலைப்பட்டது. கோவிந்தராசனாரிடம் தமிழ் பயிலத் தொடங்கிய இவர் பின்னர் திருமயிலை மகாவித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களிடமும் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சு.த.சற்குணம் அவர்களிடமும் கல்வி பயின்றார். இவர் நடுத்தரப் பள்ளி ஆசிரியர் பயிற்சியும், எழும்பூர் நுண்கலைப் பள்ளியில் சித்திரமும் பயின்றார். தமிழ் மொழியில் மட்டுமின்றி ஆங்கிலம், மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளிலும் போதிய அறிவுத் திறம் பெற்று விளங்கினார். இவர் தம் பதினாறாம் அகவை முதல் தமிழ் நூல்களைச் சுவைத்துப் படிக்கும் திறம் பெற்றிருந்த இவர் 'செந்தமிழ்' முதலிய உயர்ந்த தமிழ் வெளியீடுகளை விடாது படித்துத் தம் புலமையைப் பெருக்கிக் கொண்டார்.

பணி : வறுமையில் வாடிய தம் குடும்பத்தைக் காக்கும் பொருட்டு மோட்டார் உதிரிப்பாகங்கள் விற்பனைக் கடையில் விற்பனையாளராகப் பணியாற்றினார். அப்பணியினின்றும் விலகி 'திராவிடன்' என்ற இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராகப் பணியாற்றினார். அப்பணியையும் புறந்தள்ளிய இவர் நடுத்தரப் பள்ளி ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றினார். இப்பணியில் இருக்கும் போதுதான் தமிழ்ப்பணி ஆற்றுவதற்குரிய வாய்ப்பும் வசதியும் இவருக்கும் பல்கிப் பெருகின எனலாம்.

பண்பு நலன்கள் : வறியராகப் பிறந்த இவர் பண்பு நலன்களில் வளனாராக விளங்கியதை அறிய முடிகிறது. இவர் அடக்கமும், எளிமையும், மனித நேயப் பற்றும் உடையவர். எப்பொழுதும் தூய,

ஒழுங்கான சாதாரண உடையையே அணியும் பழக்கம் உடைய இவர் ஆடம்பர வாழ்க்கையைக் கிஞ்சிற்றும் விரும்பாதவர். பணக்காரர்கள் உள்ள இடங்களுக்கு அழைப்பு இல்லாமல் ஒரு போதும் செல்லவே மாட்டாராம் இவர்.

அறிஞர்களின் மதிப்பீடு : இவ்வறிஞரைப் பற்றிய சில அறிஞர் பெருமக்களின் கருத்துகளை இங்குச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும். "இவர், செய்வனத் திருந்தச் செய்யும் பண்பினர் ; எளிய வாழ்வு மேற்கொண்டு அமைதியாக இருந்து உயரிய தொண்டாற்றும் இயல்பினர்" என்று மு.வரதராசனார் பாராட்டுகிறார். (மறைந்து போன தமிழ் நூல்கள், பக்கம் V)

இவர், நல்லொழுக்கம் வாய்ந்தவர் என்றும் நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னே போல் போற்றுபவர் என்றும் ஆண்டில் இளையவராயினும் ஆராய்ச்சித் துறையில் முதிர்ந்தவர் என்றும் சுவாமி விபுலானந்தர் இவரது பண்பு நலன்களையும் ஆய்வு நுட்பத்தையும் எடுத்தியம்பியுள்ளார். (கிறித்தவமும் தமிழும், முகவுரை, பக்கம் 9)

திரு.வி.க, இவரைச் சீர்திருத்தக்காரர் ; ஆராய்ச்சியாளர் ; காய்தல் உவத்தல் அகற்றி எதையும் நோக்குபவர் என்று குறிப்பிடுகிறார். (இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், பக்கம் xiv)

இவரின் தேடல், உழைப்பு, இலக்கிய நோக்கு, விமர்சனப் போக்கு, புலப்பாட்டுத் திறன் யாவராலும் போற்றுதற்குரியன. கலைகள் பற்றிய ஆய்வு நூல் அளித்தவர்களில் இவர் முன்னோடி. இலக்கிய ஆராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி, நாணயவியல் முதலிய துறைகளில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே முத்திரை பதித்த முதல் வரிசை ஆய்வாளர். இவரின் நூல்கள் அனைத்தும் சீனியாய், கற்கண்டாய் காலமெல்லாம் இனிப்பவை என்று டாக்டர் ச.மெய்யப்பன் இவரது பணியைப் போற்றுகின்றார். (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பக்கங்கள் V-Vi)

ஒரு தனியார் பள்ளியில் தொடக்க நிலை ஆசிரியராக இருந்து மறைந்த அறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி வரலாற்றுக்கும் தமிழியலுக்கும் அளித்த ஆய்வுப் பங்களிப்புகளுக்கு நிகரான ஒன்றை இதுவரை எந்தப் பல்கலைக்கழகமும் நிகழ்த்தியது இல்லை என்று சுந்தரனார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் க.ப.அறவாணன் அறுதியிட்டுக் கூறியுள்ளார். (தினமணி-14.12.1998) தனி ஒரு மனிதன் நிகழ்த்திய ஆய்வுகளை இன்று வரை ஒரு பல்கலைக் கழகம் கூட நிகழ்த்தவில்லை

என்பதன் மூலம் இவ்வறிஞர்தம் ஆய்வுப் பணியின் ஆழமும் அகலமும் நன்கு புலப்படும்.

பிறர் சிந்தியாத விதத்திலும், பிறர் கூறாதவகையிலும் உண்மைகளைத் தலைச் சுமைந்து, தமிழ் மக்களுக்கு ஒட்பம் (Wisdom) வழங்குவனவாக இவரது நூல்கள் அமைந்துள்ளன என்று இவ்வறிஞரின் மாணவரான ஊ.ஜெயராமன் குறிப்பிடுவதன் வழி (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் – பக்கம் xvii) இவரது நூல்களின் தனித்தன்மையை விளங்கிக் கொள்ளலாம்.

கடும் உழைப்பாளி : சிறந்த வரலாற்றாசிரியர் ; நடுநிலை பிறழாத ஆராய்ச்சியாளர் ; தொல்பொருள் ஆய்வாளர் ; மொழியியல் அறிஞர் ; சமயப் பேரறிஞர் ; கலையியல் வல்லுநர் ; இலக்கியத் திறனாய்வாளர் ; தலை சிறந்த பண்பாளர் என்று இவரின் பண்பு நலன்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் டாக்டர் ம.சத்தியமூர்த்தி அவர்கள். (தமிழுலகம் நினைக்க மறந்த தமிழறிஞர்கள் – பக்கம் 55)

இவை அனைத்திற்கும் மேலாக,

**“தமிழுக்குத் தொண்டர் யார்க்கும்**
**தலைத் தொண்டன் ; அடிமை அல்லன்**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**கொள்கையில் அசைக் கொணாத**
**இமயமும் தோற்கும் அண்ணல் . . . .**
**(தமிழ் நிலம் – 14.10.1952)**

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாராட்டுவது இவரது சீரிய தமிழ்ப் பணிக்குச் சூட்டப்பட்ட வைரக் கீரிடம் ஆகும்.

இவர்களேயன்றி, இப்பெருமகனாரின் ஆராய்ச்சித் திறன், எழுத்துத் திறன், உழைப்புத் திறன் ஆகியவற்றைப் பாராட்டியப் பெருமக்களுள் குறிப்பிடத் தக்கவர்களாக பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார், டாக்டர் இராசமாணிக்கனார், ஔவை டி.கே.சண்முகம், கி.வா.ஜகன்னாதன், கவிஞர் முடியரசன், டாக்டர். மு.ஆரோக்கியசாமி, ந.சஞ்சீவி, மீ.பா.சோமசுந்தரம், அழ.வள்ளியப்பா ஆகியோரைச் சுட்டலாம்.

அறிஞர் பெருமக்களுடன் தொடர்பு : சதாசிவப் பண்டாரத்தார், அ.சிதம்பரநாதன், தெ.பொ.மீ., கா.வெள்ளைவாரணம்,

சாமி.வேலாயுதம், விபுலானந்த சுவாமிகள், பெரியார் ஈ.வெ.ரா., மறைமலையடிகள், ஜீவபந்து, ஸ்ரீபால், யாழ்ப்பாணம் இராஜ.அரியரத்தினம், குல.சபாநாதன், செக்கோஸ்லாவியா நாட்டவர் கமில் சுவலபில் போன்ற தம் சமகால அறிஞர் பெருமக்களோடு மயிலை சீனி.வேங்கடசாமி நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

பட்டங்களும் பரிசுகளும் : இவ்வறிஞருக்கு மணிவிழாக் கொண்டாடுவது எனச் சான்றோர்கள் முடிவு செய்தனர். அதன் பொருட்டுச் செந்தமிழ்ச் செல்வியில் மணிவிழா வேண்டுகோள் (சிலம்பு 36, பரல் 4, பக்கம் 177, டிசம்பர் 1960) ஒன்று வெளியிடப்பட்டது. 17.3.1961-இல் சென்னையில் உள்ள கோகலே மண்டபத்தில் சென்னை உயர்நீதிமன்ற நடுவர் மாண்புமிகு எஸ்.கணபதியாபிள்ளை அவர்கள் தலைமையில் இவருக்கு மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. மணிவிழா மலரைப் பேராசிரியர் மயிலை சிவமுத்து வெளியிட்டார். இவ்வறிஞரின் மணிவிழாச் சிறப்புகளை 'மணிவிழா மாண்பு' என்று தலைப்பிட்டுப் படங்களுடன் 'செந்தமிழ்ச் செல்வி' வெளியிட்டது. (சிலம்பு 35, பரல் 8, பக்கங்கள் 340-347, ஏப்ரல் 1961)

இம் மணிவிழாவில்தான் உயர்நீதி மன்ற நடுவர் மாண்புமிகு எஸ்.கணபதியா பிள்ளை அவர்களால் வழங்கப்பட்ட 'ஆராய்ச்சிப் பேறறிஞர்' என்ற பட்டத்தைச் சீனி.வேங்கடசாமி தம் வாழ்நாளில் கிடைக்கப் பெற்ற முதல் பட்டமாக உவகையுடன் ஏற்றுக் கொண்டார்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற பட்டமும் 4000 வெள்ளிப் பொற்காசுகளும் அன்றைய தமிழக ஆளுநர் மாண்புமிகு பிரபுதாஸ் பட்வாரி அவர்களால் இவருக்கு 29.3.1980-இல் வழங்கப்பட்டது. இவரது உடல்நிலை காரணமாக இவரால் நேரில் சென்று இப்பட்டத்தைப் பெற முடியவில்லை. ஆதலால், இவர் தம் பேத்தி அழகம்மை இப்பட்டத்தைப் பெற்று வந்தார். (சிலம்பு 54, பரல் 8, பக்கங்கள் 409-410, ஏப்ரல்' 1980) இதே நாளில் ஔவை.சு.துரைசாமி பிள்ளைக்கும் இப்பட்டம் வழங்கப் பட்டது. இவர் நேரில் சென்று இப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆசிரியர் குழுவிலும் இருந்து பணியாற்றி வந்தார். அக்கழக நூலாசிரியருள் இவர் மிகச் சிறந்து விளங்கினார். எனவே கழகத்தின் 1008-வது வெளியீட்டு விழாவின்

போது இவருக்குக் கேடயம் அளித்துப் பாராட்டப்பட்டது. (சிலம்பு 54, பரல் 9, பக்கங்கள் 431-432, மே’ 80)

தமிழ்ப்பணி : தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம், கலை, பண்பாடு, சொல்லாய்வு, மொழியாய்வு, தமிழக வரலாறு, கல்வெட்டு என்று பல துறைகளில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ள இவ்வறிஞரின் தமிழ்ப்பணி பிறரின் தமிழ்ப் பணியினின்று மேம்பட்டும் உயர்ந்தும் நிற்கிறது. தமிழில் எதையோ எழுதினோம் – வெளியிட்டோம் என்றில்லாமல் கிடைத்தற்கு அரிய செய்திகளை எல்லாம் இவர் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் ஆய்ந்தும் வெளியிட்டுள்ளார்.

இனி, அவரது நூல்களின் தனித்துவம் குறித்து ஆராயலாம். இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் இலக்கிய வரலாறும், தமிழக வரலாறும் மிகுதியும் இருள் சூழ்ந்த நிலையிலேயே இருந்தமையை அனைவரும் அறிவர். அவ்வேளையில் இவர் எழுதிய நூல்கள் அத்துறைகளுக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்ததோடன்றி புதிய, அரிய கருத்துகளின் கொள்கலன்களாகவும் அமைந்திருந்தன. இவரது நூல்களில் பெரும்பான்மையும் பல துறைகளில் முதல் முயற்சியாக அமைந்துள்ளமையைக் காண முடிகிறது.

நிகழ் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாறே முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நிலையில் கடந்த நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுவது என்பது மிகக் கடுமையாகும். இக்கடும் பணியைப் ‘பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்’ என்ற நூலில் காண முடிகிறது. முறையான தமிழ் இலக்கிய வரலாற்றைப் பிறர் எழுதுவதற்கு முன்னோடியாக இந்நூல் அமைந்துள்ளதைப் பெருமையுடன் நினைத்துப் பார்க்க முடிகிறது.

ஒரு நாள் ஓரிடத்தில் பார்த்துவிட்டு வந்த புத்தகம் மறுநாள் தேடிச் செல்லும்போது அங்கு இருக்காது. மீண்டும் அப்புத்தகத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது எளிதன்று. அவ்வாறிருக்கையில் இவர் ‘மறைந்து போன தமிழ் நூல்கள்’ என்ற ஒரு நூல் எழுதி வெளியிட்டதை எண்ணிப் பார்க்கும் போது வியப்பே மேலிடுகிறது. அந்நூலை இவர் எழுதுவதற்கு ஒரு துயரச் சம்பவமே காரணமாக இருந்தது. திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்த இவர் இரண்டு குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்த்து வந்தார். இவ்விரண்டு குழந்தைகளும் எதிர்பாராத

விதமாக இறந்து போயினர். அவ்விழப்பையும், சோகத்தையும் மறக்கும் வகையில் பல புத்தகங்களைத் தொடர்ந்து படித்துக் கொண்டே இருந்தார் இவர். யாப்பருங்கல விருத்தி என்ற நூலைப் படிக்கும் பொழுது அதில் காட்டப்பட்டிருந்த பல மேற்கோள் நூல்கள் மறைந்து போயிருந்ததை உணர்ந்தார். தம் வளர்ப்புக் குழந்தைகளின் மறைவு குறித்து வருத்திக் கொண்டிருந்த இவர் தமிழ்க் குழந்தைகளின் மறைவு (மறைந்து போன தமிழ் நூல்கள்) குறித்து எவரும் வருந்தவில்லையே என்று உணர்வுப் பூர்வமாகச் சிந்தித்ததன் விளைவே இந்நூலாகும். பெயரளவிலும், ஒரு சில பாடல் மற்றும் நூற்பா அளவிலும் காணப்படும் நூல்களைப் பற்றிய வரலாற்றுத் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் இல்லையெனில் பல தமிழ் நூல்களின் பெயர்கள் கூட நமக்குத் தெரியாமலும் புரியாமலும் போகும் அவல நிலை ஏற்பட்டிருக்கும்.

கலைகள் பற்றிய ஆய்வு நூல் எழுதியவர்களுள் இவர் முன்னோடியாக விளங்குகிறார். கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல் என்ற பெருமை இவரது 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்ற நூலுக்கு உண்டு. தமிழர், தம் பழஞ்சிறப்புகளை எல்லாம் மறந்து போனதை எண்ணி வேதனை மிகுதியுடன் இந்நூலைப் படைத்தளித்தார் இவர். கவின் கலைகள் குறித்து இவர் எழுதிய மற்றொரு நூல் 'நுண்கலைகள்' என்பதாகும். இவை இரண்டும் தமிழர்களின் கலை நுட்பத்தை எடுத்தியம்பும் அரிய நூல்களாகும். பழங்காலத்துக் கொங்கு நாட்டின் முழு வரலாற்றை முதன் முறையாக இவர் 'கொங்கு நாட்டு வரலாறு' என்று எழுதியுள்ளார். சங்கச் செய்யுள்களிலே ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்ற துளு நாடு பற்றிய செய்திகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டித் தொகுத்து முறையாக வகைப்படுத்தி 'துளு நாட்டு வரலாறு' என்ற நூலை எழுதியுள்ளார்.

பல்லவர்கள் வரலாற்றைக் கூறும் வகையில் 'மகேந்திர வர்மன்', 'நரசிம்ம வர்மன்', 'மூன்றாம் நந்தி வர்மன்' ஆகிய இவரது நூல்கள் அமைந்துள்ளன. தெள்ளோற்றெறிந்த நந்திவர்மன் பற்றித் தமிழில் எழுதப்பட்ட முதல் நூல் என்ற பெருமை 'மூன்றாம் நந்தி வர்மன்' என்ற நூலுக்கு உண்டு. இவ்வரசனைப் பற்றிய சான்றுகள் முழுமையாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூலின்கண் அமைந்துள்ள இன்றியமையாப் பாடங்கள் இந்நூலுக்கு மேலும் மெருகூட்டுகின்றன. தமிழர்களின் பழைய வரலாற்றை அறிய விரும்புபவர்களுக்குப்

‘பழங்காலத் தமிழர் வாணிகம்’, ‘சாசனச் செய்யுள் மஞ்சரி’ ஆகிய நூல்கள் நல்ல துணையாக நிற்கின்றன.

இவர் சமயப் பொறை உணர்வு மிக்கவர் என்பதும் காய்தல் உவத்தல் இன்றி கருத்துக்களை வெளியிடக் கூடியவர் என்பதும் ஆய்வு நேர்மை உடையவர் என்பதும் சமய வரிசையில் இவர் எழுதிய நூல்களின் வழி வெளிப்படும். அவற்றுள் ‘பௌத்தமும் தமிழும்’ என்ற நூல் பௌத்தர்களின் சமயம், தமிழ்த் தொண்டு ஆகியன பற்றி எடுத்துரைக்கும் முறையான முதல் நூல் ஆகும்.

சமண சமயத்துக்கு எதிரான கருத்துக்கள் பிற சமயத்தாரால் தமிழகத்தில் உருவாக்கப்பட்டன. அதனால், தமிழர்கள் அச்சமயத்தின் மேல் வெறுப்புணர்வு கொள்ளத் தலைப்பட்டனர். ஆனால் அச்சமயத்தினர் தமிழுக்கு ஆற்றிய பணியானது பிற சமயத்தினர் தமிழுக்கு ஆற்றிய பணிகளைக் காட்டிலும் மேம்பட்டது என்பதை நன்கு உணர்ந்த இப்பெருமகனார், சமண சமயத்தின் தமிழ்ப் பணிகளை வெளிப்படுத்தி வரலாற்றை நிலைப்படுத்த முயன்றதன் விளைவே ‘சமணமும் தமிழும்’ என்ற இவரது நூல் ஆகும். சமயங்களின் தமிழ்ப் பணி குறித்த வரிசையில் மேலும் ‘கிறித்தவமும் தமிழும்’, ‘சமயங்கள் வளர்த்த தமிழ்’ ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

மகாபலிபுரத்து ஜைன சிற்பம், இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், பௌத்தக் கதைகள், புத்தர் ஜாதகக் கதைகள், இசைவாணர் கதைகள் ஆகிய நூல்களின் வழி இப்பெருமகனாரின் பல் சமயப் பொறை உணர்வு வெளிப்படுகிறது. தமிழக வரலாற்றைத் தெள¤வுறுத்தும் நோக்கில் இவர் களப்பிரர் ஆட்சியில் தமிழகம், சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், சேரன் செங்குட்டுவன், பாண்டியர் வரலாற்றில் ஓர் அரிய புதிய செய்தி ஆகிய நூல்கள் அமைந்துள்ளன. சிறந்த சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பாக அஞ்சிறைத் தும்பி என்ற நூல் அமைந்துள்ளது. சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள், சாசனச் செய்யுள் மஞ்சரி ஆகியவை அரிய கல்வெட்டு ஆராய்ச்சி நூல்களாகும்.

இதழ்களின் வழி தமிழ்ப்பணி : தம் அரிய தேடலாலும் கடும் முயற்சியாலும், நுண்மாண் நுழை புலத்தாலும் கண்டறிந்த ஆய்வு முடிவுகளின் கருத்துப் பெட்டகங்களாக இவரது நூல்கள் மட்டுமின்றி இவர் எழுதிய கட்டுரைகளும் அமைந்துள்ளன.

நண்பன், கல்வி, சௌபாக்கியம், திராவிடன், குடியரசு, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், கலைக்கதிர், திருக்கோயில், ஈழகேசரி போன்ற இதழ்களில் மயிலை சீனி.வேங்கடசாமியின் நூல்கள் மற்றும் கட்டுரைகளைத் தொகுத்து நோக்குமிடத்து இவர் ஆய்வுப் பணியை முழுநேரப் பணியாக மேற்கொண்டதையும் அவ்வாய்வுப் பணிக்கு இடையூறு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத் திருமணமே செய்து கொள்ளாமல் தமிழ்ப் பணி ஆற்றிய இவரது தன்னலமற்ற சீரிய தியாக உயர்வும் புலப்படும். தமிழில் மறைந்து போனதும் மறந்து போனதுமான மிகுந்த செய்திகளை வெளிக்கொணரும் வகையில் அமைந்துள்ள இவரது தலை சிறந்தத் தமிழ்ப் பணியானது இன்றைய ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் முன்னோடி வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை. இத்தகு அரும்பெரும் தொண்டாற்றிய இப்பெருமகனார் தம் இறுதிக் காலத்தில் மிகுந்த துன்பத்திற்கும், நோய்க்கும், மன உளைச்சலுக்கும் ஆளாகி 8-5-1980-இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் இன்று கிடைத்தல் அரிதாகி விட்டன. எனவே அந்நூல்களை எல்லாம் மறுபதிப்பாக வெளியிட வேண்டும். மேலும் இவர் எழுதிய கட்டுரைகளை எல்லாம் தொகுத்து நூல் வடிவில் வெளியிட வேண்டும். இவை இரண்டுமே தமிழ் வளர்த்த இவ்வறிஞர் பெருமகனாருக்குத் தமிழ் ஆர்வலர்களும், சான்றோர்களும், தமிழுலகமும் செலுத்தும் நூற்றாண்டு விழா காணிக்கையும் நன்றியறிதலுமாக இருக்க முடியும் என்று பலரும் நூற்றாண்டு விழா நேரத்தில் பேசினர். இதனைச் செவிமடுத்துத் தமிழக அரசு இவரது நூல்களை நாட்டுடைமை ஆக்கின. அதன் பயனாக இவரது நூல்களும் கட்டுரைகளும் சீரிய முறையில் வெளிவந்து கொண்டு உள்ளன.

———————————————————————————-

க.துரையரசன்.முதுநிலைதமிழ் விரிவுரையாளர்,
அரசு கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்.

தமிழ்க்களம்
மரபின் நவீனம்

https://tamizhkalam.com/mayilai-seeni-vengadasamy/

# மயிலை சீனி வேங்கடசாமி




தமிழகத்தின் வரலாற்றை கல்வெட்டியல், நாணயவியல் மற்றும் தொல்லியல் அடிப்படையில் கட்டமைத்து, ஒழுங்குபடுத்தியதில் மயிலை. சீனி வேங்கடசாமி முதன்மையானவர் ஆவார். சென்னை மயிலாப்பூரில் 1900ம் ஆண்டு ஒரு சித்த மருத்துவருக்கு மகனாகப் பிறந்த இவர், இளம் வயது முதலே தனது அண்ணனான தமிழறிஞர் கோவிந்தராஜனிடம் தமிழ் பயின்றார். பின்னாட்களில் மகாவித்வான் சண்முகம்பிள்ளை, பண்டிதர் சற்குணர் ஆகியோரிடம் தமிழை நன்கு கற்றுத் தேர்ந்தார். மயிலாப்பூர் புனித சாந்தோம் உயர்நிலைப் பள்ளி மற்றும் சென்னை கலைக் கல்லூரியில் படித்த அவர் ஓவியக் கலையில் இருந்த ஆர்வத்தால், கல்லூரிப் படிப்பை நிறுத்திவிட்டு, எழும்பூர் ஓவியப் பள்ளியில் சேர்ந்து ஓவியப் பயிற்சி பெற்றார். பின்னர்

சாந்தோம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றத் துவங்கினார். அக்காலகட்டத்தில் தனது பணிகளின் இடையே தமிழ் மற்றும் தமிழகம் பற்றிய ஆராய்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டார். அவரது ஆராய்ச்சிகள் தமிழகத்தின் மறைக்கப்பட்ட வரலாற்றை உலகறியச் செய்தது. அவரது ஆராய்ச்சிகள் மூலமாகச் சிலத் தகவல்கள் இங்கே:

**களப்பிரர் கால ஆய்வுகள்:**

தமிழக வரலாற்றில் களப்பிரர் காலமாக அறியப்படும் கி.பி. 3-ம் நூற்றாண்டு முதல் கி.பி.9ம் நூற்றாண்டு வரையிலான காலங்களில் தமிழ் நிலப்பகுதியை ஆட்சிபுரிந்த மன்னர்கள் பற்றிய ஆய்வுகளில் மயிலை. சீனி வேங்கடசாமி தீவிரமாக ஈடுபட்டார். தமிழகம் முழுவதும் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று, கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகளை ஆய்வு செய்து களப்பிரர் கால வரலாற்றை ஆதாரங்களுடன் நிறுவினார். அவற்றுள் சில:

- பிராமி, கிரந்தம், தமிழ் என அனைத்து எழுத்துமுறைக் கல்வெட்டுகளையும் படித்தறிந்து ஆராயும் திறன் பெற்றிருந்த அவர், பிராமி எழுத்து வருவதற்கு முன்பே தமிழ் எழுத்து வழக்கில் இருந்ததைச் சான்றுகளுடன் நிறுவினார். மேலும், தமிழ் பிராமி (தமிழி) எழுத்திலிருந்து தமிழ் வட்டெழுத்து வடிவம் பெற்றது களப்பிரர் காலத்தில் நிகழ்ந்ததே என்பதைத் தனது ஆய்வுகளின் மூலம் அறிந்துணர்ந்தார். இந்த வட்டெழுத்து வடிவம் தான் இன்று நாம் பயன்படுத்தும் தமிழ் எழுத்து வடிவத்திற்கு அடிப்படையாகும். இவ்வாறு தமிழ் மொழியின் எழுத்து வடிவத்தின் வரலாற்றை முதன் முறையாக சான்றுகளோடு உலகிற்கு எடுத்துரைத்தார்.

- திருக்குறள், கார்நாற்பது, களவழி நாற்பது, திரிகடுகம், ஏலாதி, இனியவை நாற்பது, சீவக சிந்தாமணி, முதுமொழிக்காஞ்சி, விளக்கத்தார் கூத்து, நரிவிருத்தம், எலிவிருத்தம்,

முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்களும், அபிநயம், நத்தத்தம், பல்காயம், பல்காப்பியம், காக்கைப் பாடிணியம் போன்ற இலக்கண நூல்களும் களப்பிரர் காலத்தைச் சேர்ந்தவை என்பதைத் தனது ஆய்வுகள் மூலம் உறுதி செய்து, தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய வரலாற்றை அறிவதற்கும் பேருதவி செய்தார். மேலும், முன்னர் இருந்த வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பா வகைகள் தாழிசை, விருத்தம், துறை என்று விரிவுபெற்றதும் களப்பிரர் காலத்தில் தான் என்பதையும் விளக்கினார்.

- கி.பி. 2ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் இருந்த தாராதேவி ஆலயம்தான் இப்போது காஞ்சி காமாட்சியம்மன் கோயிலாக உள்ளது என்பதையும் அந்த பௌத்த ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த மணிமேகலையின் உருவச்சிலை இன்று அன்னபூரணி என்ற பெயரில் இந்து தெய்வமாக மாற்றப்பட்டு விட்டது என்பதையும் சான்றுகளோடு கூறி களப்பிரர் ஆட்சியின் நிகழ்வுகள் அழிக்கப்பட்ட வரலாற்றை உறுதி செய்தார். மேலும், அன்றைய மணிமேகலை, சம்பாபதி, தாராதேவி ஆகிய பௌத்த சிறு தெய்வங்கள், இன்று காளி, பிடாரி, திரௌபதி அம்மன் ஆகிய பெயர்களில் இந்து தெய்வங்களாக உள்ளன என்பதையும் தன் ஆய்வுகள் மூலம் பதிவு செய்தார்.

- 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தின் நிலை, பல்வேறு நிலப்பகுதிகளை ஆண்ட மன்னர்கள், கலாச்சாரம் உள்ளிட்ட பல அம்சங்களையும் ஆராய்ந்தறிந்து 'துளுநாட்டு வரலாறு', 'கொங்குநாட்டு வரலாறு' உள்ளிட்ட நூல்களை எழுதினார். மேலும், தனது ஆய்வுகள் மூலம் அறிந்த கருத்துகளை 'மகேந்திரவர்மன்', 'கவுதம புத்தர்', 'புத்தர் ஜாதகக் கதைகள்', 'வாதாபிகொண்ட நரசிம்மவர்மன்', 'இறைவன் ஆடிய ஏழுவகைத் தாண்டவங்கள்', 'சமயங்கள் வளர்த்த தமிழ்' உள்ளிட்ட 33 நூல்களில் கூறியுள்ளார்.

- களப்பிரர் காலம், பல்லவர் காலம், சோழர் காலம் ஆகியவற்றில் உருவாக்கப்பட்டப் பாறைக் கோயில்கள், சிற்பங்கள், ஓவியங்கள் மற்றும் கட்டிடக் கலையின் தன்மைகளைத் தொல்லியல், கல்வெட்டியல் மற்றும் நாணயவியலின் அடிப்படையில் களப்பணிகள் மூலம் ஆய்வு செய்து, தமிழகத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியை ஆதாரங்களுடன் பதிவு செய்தார்.

இவ்வாறு, கள ஆய்வில் தான் கண்டறிந்த உண்மைகளை, 'திராவிடன்' 'குடியரசு', 'ஊழியன்', 'செந்தமிழ்', 'ஆனந்தபோதினி', 'ஈழகேசரி' உள்ளிட்ட இதழ்களில் 200-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளில் எழுதி தமிழகத்தின் வரலாற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தினார். மேலும், 1963-64 ஆண்டுகளில், சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பேற்று அரிய பல ஆய்வு நூல்கள் வெளிவர உதவினார்.

இவ்வாறு தமிழுலகம் மறக்கக் கூடாத அறிஞர்களுள் ஒருவரான இவரைப் பற்றி,

**"தமிழையே வணிக மாக்கி**
**தன்வீடும் மக்கள் சுற்றம்**
**தமிழிலே பிழைப்ப தற்கு**
**தலைமுறை தலைமு றைக்கும்**
**தமிழ்முத லாக்கிக் கொண்ட**
**பல்கலைத் தலைவன் எல்லாம்**
**தமிழ்சீ னிவேங்க டத்தின்**
**கால்தூ சும்பெறா றென்பேன்!"**

- என்று போற்றிப் பாடுகிறார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள். இத்தனைச் சிறப்புகளைப் பெற்ற ஆய்வுப் பேரறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி அவர்கள் 1981ஆம் ஆண்டு மே திங்கள் 8ஆம் நாள் மறைந்தார். அதன் பின்னர், 2000 ஆம் ஆண்டு, தமிழக அரசு அவரது நூல்களை நாட்டுடைமையாக்கி, அவரை நம் மத்தியில் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. தமிழரின் வரலாற்றை அறிவதற்கு மயிலை. சீனி வேங்கடசாமியாரின் ஆராய்ச்சிகளே பெரிதும் துணை நிற்கின்றன என்றால் மிகையாகாது.

# காணொளிகள்

01] மயிலை சீனி. வேங்கடசாமி வரலாற்றாய்வுகளும் பயன்பாடும் - முனைவர் சி. இளங்கோ
https://www.youtube.com/watch?v=AZojtLPXyd8 [1:09:55]

02] மயிலை சீனி. வேங்கடசாமி நினைவலைகள் சிறப்பு நிகழ்வு | முனைவர். ப. ஜீவகன்
https://www.youtube.com/watch?v=nPKSZ9NbnDo [1:20:24]

03] பழங்காலத்து அணிகலன்கள் | மயிலை சீனி வேங்கடசாமி
https://www.youtube.com/watch?v=bKVs9fiRNU0 [27:47]

04] களப்பிரர் ஆட்சியில் தமிழகம்-மயிலை சீனி.வேங்கடசாமி
https://www.youtube.com/watch?v=aTBjFyGoNsM [15:49]

05] நம் அடையாளங்களை மீட்டவர்-மயிலை. சீனி.வேங்கடசாமி
https://www.youtube.com/watch?v=zGh7NSgcjLM [17:43]

06] மயிலை சீனி வேங்கடசமி பிறந்தநாள்/வீ.அதிவீரபாண்டியன்/திராவிடப் பல்கலைக்கழகம்.
https://www.youtube.com/watch?v=wXfAT1pwdbM [25:07]

(😊)(😊) மயிலை சீனி வேங்கடசாமி (😊)(😊)